Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-3 15-02-2005 செவ்வாய்க்கிழமை ஓசை -363


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11252)

# புலிகள் அமைப்பும், அதன் தலைமையும்

# தமிழருக்கு மட்டும் உரியதொன்றல்ல!

## தமிழர் தாயகத்திற்கு உரித்துடையோர் அனைவருக்கும் உரியது - சு.ப.தமிழ்ச்செல்வன்

**எமது விடுதலை அமைப்பும், அதன் தலைமையும் தமிழர்களுக்காக தமிழர்களின் தலைவிதியை மட்டும் நிர்ணயிக்கும் சக்தியாக எவரும் பார்க்க வேண்டாம், தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமன்றி எமது தாயகத்தில் உரித்துடைய அனைவருக்கும் உரியது என அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மாவட்ட செயலகத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூக பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய போது இதனை அவர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இம் மாவட்டங்களில் யுத்த காலங்களில் யுத்தத்தில் முழு கரிசனையையும் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதால்

(12ஆம் பக்கம் பார்க்க)


## புறச் சூழ்நிலையால் பாதிக்கப்படாத இறுக்கமான உறவு வேண்டும்!

### முஸ்லிம் பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்பு

இணைந்த ஒரு ஒருமைப்பாட்டின் மூலம் எங்களினுடைய மக்களின் முன்னேற்றத்தை-அபிவிருத்தியை-முன்னெடுக்க வேண்டிய தேவை இருப்பதையும், புறச்சூழ்நிலையால் பாதிக்கப்படாத ஓர் ,இறுக்கமான உறவினைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம் என்ற தலைவரின் செய்தியை அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்திப்பின்போது எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு தெரிவித்தார் என மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மாவட்ட செயலகத்தில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும்,

(12ஆம் பக்கம் பார்க்க)



## கிளிநொச்சி, மன்னாரில்

## இன்று கண்டனப் பேரணிகள்!

மன்னாரில் இன்று பொது அமைப்புக்கள் இணைந்து மேற்கொள்ளும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

மூன்று விடயங்களைக் கண்டித்து இந்தப் பேரணி நடைபெறவுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பேரணியில் கலந்துகொள்வார்கள். மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஆறுபேரின் படுகொலை, விடுதலைப் புலிகளின் மன்னார் அர்சியல் துறை அலுவலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் மற்றும் தாழ்வுப்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இளைஞர் ஒருவர் பொலிசாரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை போன்ற விடயங்களை கண்டித்தே இந்த கண்டனப்பேரணி மன்னார் நகரில் நடைபெறவுள்ளது. அரசாங்க அதிபரிடமும்,போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளிடமும் மனுக்கள் கையளிக்கப்படவுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.செல்ல சந்திரிகா திட்டம்

மட்டக்களப்பிற்கு சனாதிபதி எதிர்வரும் 20ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் திரியாய் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத் திட்டம் ஒன்றைஆரம்பித்து வைப்பதற்கு சனாதிபதி மட்டக்களப்பிற்கு செல்லவுள்ளதாகச் தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை சனாதிபதியின் இந்த விஜயத்தை தான் கடுமையாகக் கண்டிப்பதாகவும்,

(12ஆம் பக்கம் பார்க்க)

### -திருக்கோவில் பிரதேசத்தில்-

## எரிந்து கருகிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேசத்தில் கருகிய நிலையில் உள்ள ஓர் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் தாமரைக் குளத்தின் பிரதான வீதியில் இருந்து எரியுண்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இருபத்தைந்து வயது முதல் முப்பது வயது வரை மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலம் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சடலம் இதுவரை அடையாளம் கணப்படவில்லை. போர் நிறுத்தக்கண்கானிப்புக் குழுவினரும்,பொலிசாரும் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர். (48)

### -யாழ்.போக்குவரத்துச் சங்கங்கள்-

## நிராயுத பாணிகளான போராளிகளின் கொலையைக் கண்டித்துப் பேரணி

(நல்லூர்)

சமாதான காலத்தில் நிராயுத பாணிகளான விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் போராளிகள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து நேற்றைய தினம் தனியார் போக்குவரத்து சேவை சங்கங்களின் ஒன்றியம் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் ஊர்வலம் ஆரியகுளம் சந்தியில் இருந்து புறப்பட்டு, நாவலர் வீதிவழியாக வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை வந்தடைந்தது.

முச்சக்கரவண்டிச் சங்கத்தினர் ஊர்வலம் முனியப்பர்கோவிலடியில் இருந்து ஆரம்பமாகி, ஆஸ்பத்திரிவீதி கோவில் வீதிஊடாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை வந்தடைந்தது.

இவற்றுடன் இணைந்து தனியார் மோட்டார் வண்டி உரிமையாளர் சங்க ஊர்வலமும் வந்தது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் வைத்து முச்சக்கர வண்டிகள் உரிமையாளர் சங்கத் தலைவர் யாழ். மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழுப் பொறுப்பாளரிடம் மகஜரைக்கையளித்தார். (41,சு,33,27)

### -போராளிகள், படுகொலையைக் கண்டித்து நேற்று-

## முல்லை. மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மக்கள் நடாத்திய பேரணிகளும், கூட்டங்களும்


(அலுவலக செய்தியாளர்)

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அரியநாயகம் சந்திர நேரு மற்றும் மூன்று போராளிகளின் படுகொலையைக் கண்டித்து நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு,முள்ளியவளை, ஒட்டுசுட்டான் மல்லாவி,மாங்குளம் பகுதிகளில் மாபெரும் கண்டனப்பேரணிகளும் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

காலை 10.00 மணியளவில் நடை பெற்ற மேற்படி கண்டன நிகழ்வில் புதுகுடியிருப்பில் மாவீரர் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிய பேரவையின் செயலாளர் வீ.கனக சுந்தர சுவாமி தலைமை வகித்தார்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழீழ காவல் துறையின் குற்றப் புலனாய்வுப்பொறுப்பாளர் கானகன் ஏற்றிவைக்க தமிழீழ தேசிய கொடியினை

(12ஆம் பக்கம் பார்க்க)



புதுக்குடியிருப்பில்

## வரி விளம்பரம்

### புதியபாட நூல்கள்

பாலர்வகுப்பு முதல் உயர்தரம் வரையான அனைத்துப் புதியபாட நூல்களும் வந்துவிட்டன. சகல அறிவமுது பொத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (5723)

### தவறிவிட்டது

12.02.2005 அன்று மாலை 6-7 மணிக்கும் இடையில் க.புபலா சிங்கம் என்பவரினது தேசிய அடையாள அட்டை,நிரந்தர பயண அட்டை இரண்டு, ஒரு தொகைப் பணத்துடன் பேஸ், ஆகியவை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.தகவல்:புபலா சிங்கம். (5726)

### தவறிவிட்டது

13.02.2005 அன்று மாலை 6 மணியளவில் சிவவிநாயகம் விஸ்ணுமூர்த்தி என்பவரது அடையாள அட்டையும் (503193302V) திணைக்கள அடையாள அட்டையும், பயண அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங் கள் அடங்கிய பேஸ் ஒன்று கட்சன்வீதிச் சந்திக்கும்,புண்ணியம் கடைச் சந்திக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத் தவர்கள் நிமல்ராஜ் தேனீர் சாலையில் ஒப்படைக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள். (5729)

# கண்டாவளை மண் மாவீரர் நினைவாக மாவீரர் நினைவாலயம் திறப்பு

கண்டாவளை மண்ணிலிருந்து இதுவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமது இன்னுயிர்களை ஈகம் செய்த 46 மாவீரர்களை நினைவு கூரும் வகையில் கிளி/கண்டாவளை ம.வி. முன்றலில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலய திறப்புவிழாவும், கண்டாவளை மண்ணின் செல்வங்கள்" என்னும் கைந் நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுக் காலை 9.30 மணிக்குவித்தியாலய முதல்வர்சி.சிறிதரன் தலைமையில் ஆரம்பமானது.தொடர்ந்து நிகழ்வின் மங்கல விளக்கை கிளி/வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம்,கண்டாவளைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் ஆகியோர் ஏற்றினர் அடுத்து தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி சிறப்புத்தளபதி நகுலன் ஏற்றிவைத்தார்.தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான திரை நீக்கத்தை கட்டளைத் தளபதிகேணல் ஜெயம் செய்துவைத்தார்.அடுத்து பொதுச் சுடரை கடலுணவுவாணிபத்துறை பொறுப்பாளர் மகேந்திரம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர் களின் திருவுருவப்படங்களுக்கு பெற்றோர் ஈகச் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு போராளிகள், அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள்,பொதுமக்கள் ஆகியோர் மலர்அஞ்சலி செலுத்தினர்.இதைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின. அங்கு ஈகச்சுடரை தளபதிகளில் ஒருவரான லோறன்ஸ், கிளி/மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், விசுவமடு பிரதேசஅரசியல் துறைப்பொறுப்பாளர் ரூபன்,கிட்டு பீரங்கிப் படையணி பயிற்சி ஆசிரியர் இளம் பருதி,கிளி/மாவட்டமகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூவிழி,சாள்ஸ் அன்ரனி படையணி போராளி காண்டீபன், போராளி ஈழவண்ணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர் வரவேற்புரையை பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் பாலேஸ்வரன் நிகழ்த்தினார். ஆசிரியுரையை புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ சிவ லோக நாதக்குருக்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து கிளி/மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ்,கிளிமாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் கருத்துரைகளை வழங்கினர்.

அடுத்து "கண்டாவளை மண்ணின் செல்வங்கள்" கைநூலின் வெளியீட்டுரை நிகழ்த்தி முதல்பிரதியை கட்டளைத் தளபதிக்கு வழங்கினார். கிளி/வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள்.அடுத்து மதிப்பீட்டுரையை புலிகளின்குரல் வானொலி நிகழ்ச்சிதயாரிப்பாளர். பொன் காந்தன் நிகழ்த்தினார். தொடர்ந்து அரங்கியல் குழுவைச்சேர்ந்த உறுப்பினர் செ.விந்தன் உரையாற்றினார்.இறுதியாக கட்டளைத் தளபதி கேணல்ஜெயம் சிறப்புரை நிகழ்த்தினார்.தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் மாவீரர்நினைவு நடனங்கள் இடம் பெற்றன.(14)

## துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 1944 07 20



மறைவு 2005 02 13

### சிவசம்பு முருகையா

சொ.முகரி. பன்னாலை,தெல்லிப்பளை

தற்காலிக முகவரி. இல.103,பாவிநகர், வவுனிக்குளம்.

இளவேனில் வாணிப பணியாளர் மு.அருளினி அவர்களின் அன்புத் தந்தையாரான சிவசம்பு முருகையா அவர்கள் காலம் சென்ற செய்தி கேட்டு மிகுந்த கவலையடைந்தோம். இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்,போராளிகள்,
பணியாளர்கள்,
இளவேனில் வாணிபம்.

(5732)

## யாழ்ப்பாண மாநகரசபை

**துரையப்பா விளையாட்டரங்கு மேற்பார்வையாளர் பதவி-(ஒப்பந்த அடிப்படை)**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாநகரசபையினால் கோரப் படுகின்றது.

**தகைமை :-**

விண்ணப்பதாரி ஒரு விளையாட்டு உத்தியோகத்தராக உள்ளவராகவோ, அல்லது விளையாட்டு உத்தியோகத்தராக இருந்து ஓய்வுபெற்றவராகவோ இருக்க வேண்டும்.

நல்ல தேகாரோக்கியம் கொண்டவராக இருப்பதுடன், இதற்கு முன்னர் குறைந்தது 05 வருடம் சேவையாற்றியதற்கான அனுபவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**முடிவுத்திகதி :- 28.02.2005 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்**

(கலாநிதி க.குணராசா)
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்

(சி-11337)

## UNited Nations Development Programme
## Sustainable human development

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries ,working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

The UNDP Transition Programme focus on economic recovery through micro finance, capacity vuilding and participatory based planning in volving partner ships with a range of stakeholders from civil society, the public sector, NGOs and other UN agencies. UNDP is recruiting national staff for the post of Drivers.

### DRIVER-Kilinochchi
### (To start on1st March 2005)

* Valid driving license with knowledge of operating 4 WD vehicles.
* To drive UNDP Vehicles safely and responsibly;
* To drive UNDP staff /visiting missions to meeting and field visits in a UNDP vehicle;
* To operate and maintain all UNDP radio equipment to professional standard;
* To abide by all UN security regulations and UNDP policy and procedures and an field restrictions made on road travel by authorities;
* To ensure the service maintenance of the vehicles are carried out;
* To ensurethe vehicles are kept clean and tidy;
* To maintain log book recording vehicle movements, mileage and fuel consumption;
* perform other related duties as required.

**Educational Back Ground:**
* Vaild driving license, knowledge of sri Lanka driving rules and regulations

**Experience:**
* 5 years work Experience as a driver with a safe driving record.

**Languages:**
* Good working knowledge of English and Tamil
* knowledge of Sinhala an asset

**Other:**
* Skills in minor vehicle repairs
* Familiar with use of HF and VHF radios an asset
* Willingness to travel to all areas of SriLanka
* Motivated, flexible and capable of working under pressure;
* previous UN,INGO,or NGO experience preferred.

Please send us a detailed CV with names of two non- related referees and contact telephone number to reach us within 5days of this advertisement. Applications should be addressed to

**Head of office, No.7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi.**

இங்கே வெட்டவும்




**கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தால் நடாத்தப்பட்ட நெஸ்பிறே பரிசுப்போட்டியின் இரண்டாவது அதிஸ்டசாலி நேற்று திங்கட்கிழமை தெரிவுசெய்யப்பட்டார்.**

அதிஸ்டசாலியின் பெயர் விபரம்
த.டே.கிரிசாந்தனி
இல:71, உதயநகர்மேற்கு
கிளிநொச்சி.

**தினமும் நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!**

அதன் மேல்பகுதியை வெட்டி அனுப்புவதன் மூலம் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளர் ஆகுங்கள்.


அனுப்பவேண்டிய முகவரி: நெஸ்பிறே பரிசுப்போட்டி ஈழநாதம்,யாழ்சாலை,கிளிநொச்சி.

பரிசுக்குரியவர் கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தில் நேரில் வந்து உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி தனது ஏசியா ஈருருளியினைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி-11266)


## அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077



நெஸ்பிறே பரிசுப்போட்டியின் இரண்டாவது அதிஸ்டசாலி சிறுமி ஒருவரால் தெரிவுசெய்யப்படுவதை படத்தில் காணலாம்.





வெனிசுலாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இடம் பெயரும் சாந்தா குருஸ் நகர மக்களையும், மெரிடா மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக இராணுவத்தினர் வாகனங்களிலிருந்து மருந்துப் பொருட்களை இறக்குவதையும் காணலாம்.

# போலிக் கடவுச் சீட்டு வைத்திருந்தால் மூன்று ஆண்டு சிறை-ஜப்பான் திட்டம்

(டோக்கியோ)

கடவுச்சீட்டு மோசடியைத் தடுக்கும் வகையிலும் போலி கடவுச்சீட்டு மூலம் குற்றவாளிகள் ஜப்பானுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கத்திலும் குடியுருமைக் கட்டுப்பாடு மற்றும் அகதிகள் அங்கீகாரச் சட்டத்தை திருத்த ஜப்பான் அரசு உத்தேசித்துள்ளது.

அதன்படி போலிக் கடவுச்சீட்டு வாங்குபவர்கள், கொடுப்பவர்கள், வைத்திருப்பவர்கள் ஆகியோருக்கு மூன்று ஆண்டு சிறை அல்லது ரூபா13 இலட்சம் அபராதம் விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வர சட்ட அமைச்சகம் திட்டமிட்டுள்ளதாக ஜப்பான் நாளிதழ் தெரிவித்துள்ளது.

போலிக்கடவுச்சீட்டு வைத்திருப் பவர்களுக்கு தண்டனை அளிக்க இப்போதைய சட்டத்தில் வகை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


# முஷாரப் இராணுவத் தளபதி பதவியை துறக்கவேண்டுமென்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தான் வகிக்கும் இராணுவத் தளபதி பதவியைத் துறக்க வேண்டும் என்று அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே அறிவித்த வாக்குறுதிப்படி கடந்த ஆண்டு இறுதி வாக்கிலேயே இராணுவத் தளபதி பதவியை அவர் துறந்திருக்க வேண்டும் ஆனால் தனது வாக்குறுதியிலிருந்து பின்வாங்கினார் முஷாரப். இதுபற்றி காமன்வெல்த் நாடுகளின் அமைச்சர்கள் அவரைக் கண்டித்து கருத்து வெளியிட்டிருந்தனர்.

இதற்குப் பதில் அளிக்கும் வகையில் வெள்ளிக்கிழமை பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி ரிச்சர்டு பவுச்சர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, முழுமையாக செயற்படக் கூடிய ஸ்திரமான சனநாயகத்துக்கு மாறும் நடவடிக்கைகளை மேற்கொள்வது பாகிஸ்தான் நலனுக்கு நல்லது. இந்த இலட்சியத்தை அடையும் நடவடிக்கைகள் தொடரும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த இலட்சியத்தை அடைந்தால் மட்டுமே நவீன தேசமாக பாகிஸ்தான் வடிவெடுக்க முடியும் 2007 இற்குள் அந்நாடு தேர்தலை முடித்துவிடவேண்டும் என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. நீதித்துறை நாடாளுமன்ற அமைப்புகளை அந்நாடு வலிவு படுத்தும் என்று நம்புகிறோம் என்றார் பவுச்சர்.



1945 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நேசப்படைகளின் வான்வெளித்தாக்குதலில் சின்னாபின்னமான ஜெர்மனியின் டிரெஸ்டன் நகர். சம்பவத்தில் 35 ஆயிரம்பேர் உயிரிழந்தனர். நகரின் 15 சதுர கி.மீ பரப்பளவு முற்றிலும் நாசமானது. 75 ஆயிரம் குடியிருப்புக்கள் உட்பட 85 சவீத வீடுகள், அரிய நினைவுச் சின்னங்கள் அழிந்தன.

# சனநாயகம் திரும்பாவிட்டால் நிதியுதவி நிறுத்தப்படும் நேபாளத்திற்கு அமெரிக்கா எச்சரிக்கை

(காத்மாண்டு)

**நேபாளத்தில் மீண்டும் சனநாயக நடைமுறைகள் திரும்ப வேண்டியது அவசியம். இல்லையெனில் அந்நாட்டுக்குத் தரப்படும் நிதியுதவி நிறுத்தப்படும் அபாயம் உள்ளதாக அமெரிக்கா கண்டிப்புடன்தெரிவித்துள்ளது.**

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டஅரசை நீக்கிவிட்டு மன்னர் ஞானேந்திரா ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இந்த அதிரடி நடவடிக்கை குறித்து இந்தியா , பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் ஆட்சேபம் தெரிவித்தன.


இந் நிலையில் நேபாளத்தில் மீண்டும் சனநாயக நடைமுறை மலர என்னென்ன வழிகளை மேற்கொள்ள லாம் என்பதை இந்த மூன்று நாடுகளும் தமக்குள் ஒருங்கிணைந்து ஆலோசனை நடத்தி வருகின்றன. விரைவில் சனநாயக முறைக்கு திரும்பத் தவறினால் இந்தநாட்டுக்கு கிடைக்கும் உதவி தடைப்பட நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

நேபாளத்துக்கு வெளிப்படையாகவே இது தெரிவிக்கப்பட்டுள்ளதாக நேபாளத்துக்கான அமெரிக்கத்தூதுவர் ஜேம்ஸ். எப்.மொரியார்தி கூறினார்.

மனிதாபிமான உதவிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது நூறு நாட்களுக்குள் அரசியல் கைதிகளை விடுவித்து விடுவதாக மன்னர் அறிவித்துள்ளார். அதை அவர் செயல்படுத்துவார் என்று கருதும் அமெரிக்கா சனநாயகம் மீண்டும் மலர அவர் நடவடிக்கை எடுப்பார் என்றும் நம்புகிறது.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரவேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்திவருகிறது.

# நேபாள அரசாங்கத்தைக் கலைத்தபின் மன்னருக்கு வசந்தகால வரவேற்பு நிகழ்ச்சி



நேபாளத்தில் ஆட்சியை கைப்பற்றிய பின் நடந்த முதல் அரசு நிகழ்ச்சியான வசந்தகால வரவேற்பு நிகழ்ச்சியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மன்னர் ஞானேந்திரா பங்கேற்றார்.

காத்மாண்டு நகரின் மத்தியில் ஹனுமந்த்தோகா அரண் மனை உள்ளது. இதையாரும் இப்போது பயன்படுத்துவதில்லை. எனினும் இங்குதான் வசந்தகால வரவேற்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மன்னார் இங்கு வந்து வழக்கம் போல தலைமை பூசாரியிடமிருந்து பூக்களைப் பெற்றுக் கொண்டார். அப்போது 21 குண்டுகள் முழங்கின. பாரம்பரிய இசை இசைக்கப்பட்டது.

மன்னர் வருகையை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அரச, பொலிஸ், இராணுவ அதிகாரிகள் வந்திருந்தனர். மன்னரைக் காண அரண்மனைக்கு செல்லும் வழியில் இருபுறத்திலும் மக்கள் கூடியிருந்தனர். நிருபர்கள் மன்னரை அணுக அனுமதிக்கப்படவில்லை. அவரும் நிருபர்களுக்கு பேட்டி அளிக்க முன்வரவில்லை.

# சர்வாதிகாரிகள் பட்டியலில் முஷாரப்பிற்கு ஏழாவது இடம்

### -அமெரிக்கப் பத்திரிகை கணிப்பீடு

உலகின் மோசமான சர்வாதிகாரிகள் பட்டியலில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இடம் பிடித்துள்ளார்.உலகில் மோசமாக விளங்கும் சர்வாதிகார குணம் படைத்த ஆட்சியாளர்கள் யார்-யார்? என்ற விபரத்தை அமெரிக்க பிரபல பத்திரிகை வெளியிட்டு வருகிறது. ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்த பட்டியலில் 10 தலைவாகள் இடம் பெறுகிறார்கள்.மனித உரிமை அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் இந்த பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான மோசமான சர்வாதிகாரிகள் பட்டியலில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இடம் பெற்று இருக்கிறார் அவருக்கு ஏழா வது இடம் கொடுக்கப்பட்டுள்ளது இதற்கு முன்பு முஷாரப் இந்தப் பட்டியலில் இடம் பெற்றதில்லை இப்போது தான் முதல் முறையாக சேர்க்கப்பட்டிருக்கிறார்.மோசமான சர்வாதிகாரியாக முதலிடத்தைப் பிடித்திருப்பவர் சூடானைச் சேர்ந்த உமர்அல்-பஸ்மீராவும் இரண்டாவது இடத்தை கிம்யாவியும் (வடகொரியா) மூன்றாவது இடத்தை தான்சுவியும் (பர்மா) நான்காவது இடத்தை ஷியிந்தாவும் (சீனா), ஐந்தாவது இடத்தை இள வரசர் அப்துல்லாவும் (சவுதிஅரேபியா) ஆறாவது இடத்தை கடாபியும்(லிபியா) ஏழாவது இடத்தை முஷாரப்பும் எட்டாவதுஇடத்தை சாபர்முறத் ரியாசோவும் (துர்க்மினிஸ்தான்) ஒன்பதாவது இடத்தை ராபத்முஹாபியும் (சிம்பாப்வே) பத்தாவது இடத்தை திடோரோஒபியவ்னிர்மா (இகிடோரியல் கினியா) பெற்றிருக்கின்றார்கள்.

# இந்தோனேஷியாவில் மீண்டும் நிலநடுக்கம்


பூகம்பம் மற்றும் ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியாவின் அசே மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மீண்டும் இருமுறை கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் பீதி அடைந்தனர்.

இந்த நில நடுக்கத்தால் அசே மாகாணத் தலைநகரில் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. இருப்பினும். திடீர் நில நடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. கடலுக்கடியில் ஏற்பட்ட ஒரு நில நடுக்கத்தின் அளவு ரிச்டர் கருவியில் 5.6 ஆகப் பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



ஈராக்கில் நடந்த பொதுத் தேர்தலில் சியா முஸ்லிம் கட்சி வெற்றி பெற்றுள்ள நிலையில் கிர்குக் நகரில் அமெரிக்கப்படை வீரர் முன் குர்திக்ஷ் கொடியை அசைத்துக் காட்டும் குர்திக்ஷ் இன நபர் ஒருவர்





வெலிக்கந்தப் பகுதியில் நடைபெற்ற மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள் மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேரு, அவரது சாரதி ஆகியோரின் படுகொலையினைக் கண்டித்து கடந்த 11ஆம் திகதியன்று மட்டு வாகரைப் பகுதி மக்களால் நடாத்தப் பெற்ற கண்டனப் பேரணியின் ஒரு பகுதியையும் மற்றும் சிறிலங்கா சனாதிபதிக்கு கையளிப்பதற்காக வாகரைப் பிரதேச செயலர் உதயகுமாரிடம் வாகரை மக்கள் சார்பில் திருமதி.மலர்விழி, மு.சிவபாலன், கண்ணன் ஆகியோர் கண்டன அறிக்கையினை கையளிப்பதையும் படத்தில் காணலாம். (படம்: சங்கர்)

## போக்குவரத்தில் இடையூறு

சுனாமியால் பாதிக்கப்பட்ட வட்டு வாகல் பாலத்தின் ஊடான போக்கு வரத்து தற்போது நெருக்கடியாக இருக்கின்றது. எனினும் கடந்த 10ஆம் திகதி ஒரு மணி நேரம் போக்குவ ரத்து நிறுத்தப் பட்டு பாலம் திருத்தப் பட்ட போதிலும் சரியான முறையில் செப்பனிடப்படாமையால் தொடர்ந்தும் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

## சுகாதார மன்றக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட சுகாதார மன்றத்தின் பெப்ரவரி மாதத்திற்கான கூட்டம் எதிர் வரும் 22.02. 2005 அன்று நடை பெறவுள்ளது. இக்கூட்டத்தில் மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த . சத்தியமூர்த்தி வேண்டியுள்ளார்.. (சோ)

# துவிச்சக்கர வண்டியில் முகப்பு வெளிச்சமின்றி இரவில் பயணிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை

-த.கா.வர்கனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டி ஓட்டுபவர்கள் முன் முகப்பு வெளிச்சம் துவிச்சக்கரவண்டியில் குறிப்பிட்ட முன் பகுதியில் பொருத்தி பாவித்தல் வேண்டுமென தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் வேண்டுகை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; முன் வெளிச்சமின்றி இரவு வேளைகளில் துவிச்சக்கரவண்டி ஓட்டுவது எம்மால் அவதானிக்க முடிகின்றது. வெளிச்சமின்றி துவிச்சக்கரவண்டி ஓட்டுவதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. எனவே இரவு நேரத்தில் துவிச்சக்கரவண்டியில் செல்லும் போது வெளிச்சம் பாய்ச்சி ஓட்டு வதுடன் விபத்துக்களைத் தவிர்த்து உயிர் இழப்புக்கள் உடமை இழப்புக்கள் ஏற்படாத வண்ணம் நடக்குமாறு துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்களை வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். இதனைப் பின் பற்றி நடக்காத துவிச்சக்கர வண்டி ஓட்டிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேலும் தெரிவித்தார். (சோ)

# தச்சடம்பன் பகுதியில் வயல் அறுவடை விழா

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் தச்சடம்பன் பகுதியில் வயல் அறுவடை விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. உணவு விவசாய ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாங்குளம் பிரதேச பகுதியினரும் கமநல சேவை பகுதியும் இணைந்து தூய நெல் உற்பத்திக்கு என வழங்கப்பட்ட நெல்லினங்களுக்கான அறுவடை விழா காலை 10.00 மணிக்கு விவசாயப் போதனாசிரியர் லக்ஷ்மன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் ஒலுமடு பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி. இ.சுப்பிரமணியம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் ஏற்றியதைத்தொடர்ந்து,

கருத்துரைகளை த.பொ.மே நிறுவன ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே.தயா ஒலுமடு பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி இ.சுப்பிரமணியம், முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் ஆகியோர் வழங்கினர்.

இதில் மாங்குளம் பிரதேசக் கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள், எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# மாத்தளன் பகுதி மக்களுக்கு அரச நிவாரணம் கிடைக்கவில்லை

(புதுக்குடியிருப்பு)

முல்லை. மாவட்டத்தில் சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு நிவாரண முத்திரைகள் வழங்கப் படவுள்ளதென அரச அதிகாரிகளி னால் அறிவிக்கப்பட்ட போதிலும், இது வரையும் தமக்கு வழங்கப் படவில்லையென கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மாத்தளன், அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த மக்கள் விசனமடைந்துள்ளனர்.

அத்துடன் அவர்களுக்கு மா தாந்தக் கொடுப்பனவும் அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை வழங்கப்படவில்லையென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (08)

-தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால்-

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்காக நாளை அம்பாறையில் தற்காலிக குடியிருப்பு திறப்பு

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலையின் பேரழிவு காரணமாக தங்களது வாழ்வாதாரங்களை இழந்துள்ள வடக்குக் கிழக்கு பிரதேச வாழ் மக்களுக்கு தற்காலிக குடியிருப்புக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து குடியமர்த்தி வருகின்றது. அதன் தொடர் வேலைத்திட்ட நடவடிக்கையாக அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பட்டைத்திடலில் 150 வீடுகளைக் கொண்ட தற்காலிகக் குடியிருப்பு ஒன்றினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துள்ளது. இத்தற்காலிகக் குடியிருப்புக் கிராமமானது நாளை புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுள் 150 குடும்பங்களுக்கு இவ்வீடுகள் ஒப்படைக்கப்படவுள்ளன. இக்குடியிருப்பின் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்து கணி சமான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கிடையில் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய குடும்பங்களுக்கான குடியிருப் புக்களையும் அமைப்பதற்கான வேலைத் திட்டச் செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

# தென்பகுதி சர்வமதக் குழுவினர் வட பகுதிக்கு விஜயம்

தயா மாஸ்ரரை சந்தித்து கலந்துரையாடல்



(அலுவலகசெய்தியாளர்)

தென்பகுதி சர்வமதக் குழுவினர் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

வண மாதம்பே அஸாஸிதேரர், அருட்திரு அனுர பெரேரா அடிகள் ஆகியோர் தலைமையில் தேசிய வளப் பாதுகாப்பு பிக்குகள் அமைப்பு, கரிதாஸ் நிறுவனம், சுக வாழ்வு நிறுவனம், மதங்களுக்கிடையிலான சமாதான மன்றம், போருக்கெதிரான தேசிய முன்னணி, இஸ்லாம் கற்கை நிலையம், சௌமிய இளைஞர் மன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த 50 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் நண்பகல் கிளி நொச்சியில் அமைந்துள்ள ஊடக செயலகத்தில் விடுதலைப்புலிகளின் ஊடகத்துறை இணைப்பாளர் தயா மாஸ்ரரைச் சந்தித்து கலந்துரையாடினர். அதனைத் தொடர்ந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பெற்ற முல்லைத்தீவுப் பகுதியினை மேற்படி குழுவினர் பார்வையிடச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அடையாள அணிவகுப்புக்கு நீதவான் உத்தரவு

மன்னார் தாழ்வுப்பாடு என்னுமிடத்தில் கடந்த வெள்ளியன்று பாடசாலை மாணவன் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள தாழ்வுப்பாடு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 21 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்காக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் கடந்த சனியன்று பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தாழ்வுப்பாட்டில் உள்ள கடற்படை முகாமுக்கும், பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் வீதியோரத்தில் மறைவான இடமொன்றில் உள்ள கிணற்றடியிலேயே இந்தப் பாலியல் வல்லுறவு இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. தன் மீது பாலியல் வன் முறையைபபிரயோகித்தவரைத் தனக்குத் தெரியும் என்றும் அவரைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அந்த வாலிபர் பொலிசாருக்குஅளித்துள்ள வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.இந்தச் சம்பவத்தையடுத்து உடனடியர்கவே மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக அங்கு பதற்றமும் அமைதியின்மையும் ஏற்பட்டது. பொதுமக்களின் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என பொலிசார் சந்தேகம் கொண்டதினாலும், மன்னார் பொலிசாருக்கு எதிராக இந்தச் சம்பவத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதினாலும், வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் இன்ஸ்பெக்டர் தலைமையில் விசேட பொலிஸ் குழு ஒன்றை நியமித்து விசாரணைகள் நடத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் மன்னார் மாவட்ட நீதிமன்றத்திலேயே நடைபெறவேண்டும் என்றும், சந்தேக நபரை விளக்கமறியலில் வைத்து, எதிர்வரும் 21 ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# வடமராட்சி கிழக்கு கூ.தொ.கூ.ச.சமாசத்திற்கு சுனாமியால் 1.42 கோடி ரூபாய் இழப்பு!

சுனாமி கடல் அனர்த்தத்தினால் வட மராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் சமாசத்திற்கு ஒருகோடியே 42 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

சமாசத்தின் தலைமை அலுவலகத்தின் கட்டடம் தளபாடங்கள் மொத்த விற்பனை நிலையத்தின் கட்டடம் தளபாடங்கள், வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், கடல் உணவு மொத்தக் கொள்வனவுமையக்கட்டடம், தளபாடம் பதனிடப்பட்ட கடல் உணவுகள் சமாசத்தின் பாரவூர்தி, கூலர்வாகனம், உந்துருளிகள் சமாசத்தின் நான்கு விற்பனை நிலையங்கள் மாமுனை, தாளையடி, ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய கிளைக்கட்டடங்கள் கிளைகளில் உள்ள பொருட்கள், தளபாடங்கள் போன்றவையும் தாளையடியில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த குளிரூட்டி அறைகள் என்பனவும் சேதமடைந்துள்ளன. இதனால ஒரு கோடி 42 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது (11)

# சுனாமியால் சேதமடைந்த யாழ்.குடாநாட்டு பாடசாலைகளை மீள இயக்க அரசு முயற்சி எடுக்கவில்லை

-மாணவர் சமூகம் விசனம்

(யாழ்ப்பாணம்)

**சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் சேதமடைந்து போயுள்ள யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசப் பாடசாலைகளை மீள இயக்குவதற்கு துரித நடவடிக்கைகள் எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லையென பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்களப் பிரதேசங்களை துரிதமாக மீள நிர்மாணித்து அங்குள்ள பாடசாலைகளை மீள இயக்கி மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் அதிக அக்கறை காட்டி வரும் அரசு யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளை மீள இயக்க எது வித அக்கறையும் காட்டாது இருந்து வருவது அரசு தமிழ்ப் பிரதேச மாணவர்களின் கல்வி மேம பாட்டு நடவடிக்கைகள் மீது காட்டி வரும் வஞ்சனைப் போக் கைக் காட்டுகிறது என மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## தென்மராட்சி பிரதான தபாலகத்தில் ஊழியர் பற்றாக்குறையால் நெருக்கடி

(தென்மராட்சி)

தென்மராட்சியின் பிரதான தபால் நிலையமான சாவகச்சேரி, தபால் நிலையம் உத்தியோகத்தர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பற்றாக்குறையால் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் நெருக்கடி நிலையினைச் சந்தித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதனால் தலைமைத் தபால் அதிகாரியும் பல்வேறு வேலைகளுக்கு மத்தியிலும் கவுண்டர்களுக்குள் நின்று மக்கள் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதாக தெரிய வருகிறது. இந்தப் பிரதான தபால் நிலையத்திற்கு இப் பிரதேசத்தில் நான்கு உப அஞ்சல் அலுவலகங்கள் இயங்கி வரும் நிலையில் அங்கும் 13 தபால் ஊழியர்களுக்குப் பதிலாக ஐந்து பேரே தற்பொழுது பணியாற்றுவதாகவும், தலைமை அஞ்சல் அலுவலகத்திலோ ஆறு பேர் கடமையாற்ற வேண்டிய இடத்தில் அதிகாரி உட்பட மூன்று பேரே பணியாற்றுவதாகவும் இதனால் இப் பிரதேசத்தில் மக்களுக்கு தபால் விநியோகம் செய்வதில் பாரிய நெருக்கடிகளை இந்தத் தபால் நிலையம் எதிர்நோக்குவதாகவும் தெரிய வருகிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதே மக்களின் கேள்வியாவுள்ளது. (28)

## கடற்புலிகளும் மாணவர் அமைப்பினரும் பாதிக்கப்பட்ட மாணவருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்.வடமராட்சியின் கரையோரப்பிரதேச மாணவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின்கடற்புலிகளும், தமிழீழ மாணவர் அமைப்பினரும் கற்றல் உபகரண உதவிகளை வழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நல அபிவிருத்தியை நோக்காகக் கொண்டே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (33)

## கள்ளமாடு வெட்டியோருக்கு 9மாத சிறைத்தண்டனை விதிப்பு

(நல்லூர்)

திருடிய இரண்டு மாடுகளை வெட்டி இறைச்சி விற்பனை மேற்கொண்ட இருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் 9 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன் மாட்டு உரிமையாளருக்கு மாடுகளின் பெறுமதியான 18 ஆயிரம் ரூபாவை செலுத்தும் படியும் தீர்ப்பளித்துள்ளார்.

சுன்னாகத்தில் உள்ள சிறிலங்கா காவல் துறையினர் அனுமதிப்பத்திரமின்றி இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சென்று இவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

மாடுகளைத் திருடி வெட்டி இறைச்சி விற்பனை செய்தமைக்காக மூன்றுமாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன்

ஏற்கனவே இவ் இருவருக்கும் ஐந்து வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டு இருந்தமையால் இதனையும் சேர்த்து 9 மாத கால கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (41)

## பல.நோ.கூ.சங்கத்தில் கொள்ளையடித்த மூவருக்கு 5 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறை

மல்லாகம் நீதிமன்றில் தீர்ப்பு

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான ஏழாலைக் கிளையில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு தலா ஒரு லட்சத்து 28 ஆயிரத்து முந்நூற்றி நான்கு ரூபா ஐம்பது சதம் தண்டனையாகவும், மேலும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத் தண்டனையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி திருமதி. ஸ்ரீமதிநந்த சேகரனால் விதிக்கப்பட்டுள்ளது.

உரிய தண்டப் பணத்தைக் கட்டத் தவறினால் 18 மாத கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

ஏழாலையில் அமைந்துள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து முந்நூற்றி நான்கு ரூபா ஐம்பது சதத்தை திருடியதாக சுன்னாகம் பொலிசார் நால்வர் மீது மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முன்னர் தாக்கல் செய்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபர்களில் ஒருவரான வேலாயுதம் சிவலிங்கத்தின் மீது திருட்டுக் குற்றத்திற்காக போதிய ஆதாரம் இல்லையென்பதை நீதிமன்றம் கருத்தில் கொண்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மற்றும் ஊரெழு மேற்கைச் சேர்ந்த மூவரின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (41)

-கோண்டாவில் மேற்கு இந்து மகாவித்தியாலயத்தின்-

## 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி " இந்து தீபம் " நூல் வெளியீட்டு விழா

(நல்லூர்)

கோண்டாவில் மேற்கு இந்து மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி "இந்து தீபம" என்ற நூல் வெளியீட்டு விழா பாடசாலைத் திறந்தவெளி அரங்கில் அதிபர் செல்வி பா.மார்க்கண்டு தலைமையில் இடம் பெற்றது. கடந்த வெள்ளிக் கிழமை இடம் பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை நல்லை சிவஸ்ரீசிறீஸ் கந்தராஜக் குருக்கள், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ. சி.வேலாயுதம், நல்லூர் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், முன்னாள் பாராளுமன்ற கான்சாட் அறிக்கை யாளர் லயன் செல்லப்பா நடராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர். ஆசியுரையை நல்லை ஆதினக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கினார். வாழ்த் துரையை யாழ். கல்வி வலய தமிழ்ப் பகுதி உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் ஆற்றினார். நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம்தேசியக் கல்வியியற் கல்லூரி உப பீடா திபதி பா.தனபாலன் ஆற்றினார். நூலினைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம் வெளியிட்டுவைக்கப் பழைய மாணவனும், பிரபல வர்த்தகருமான சே.வேல்முருகன் பெற்றுக்கொண்டார். சிறப்புரையைப் பழைய மாணவனும், பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமான வை.க.சிற்றம்பலம் பெற்றுக்கொண்டார்.

நூல் ஆய்வுரையை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றினார். (41)

## தமது கிராமத்தை படையினரிடமிருந்து விடுவித்து மீளக் குடியமர வழி செய்யக் கோரிக்கை

-பருத்தித்துறை - பல்லப்பைக் கிராம மக்கள் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு-

(வடமராட்சி)

கடந்த ஒன்பது வருடங்களிற்கு மேலாகப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வடமராட்சி பருத்தித்துறையின் பல்லப்பைக் கிராமத்தை விடுவித்துத் தருமாறு அப் பகுதி மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தினில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டதையடுத்து அவ்வாண்டு "மே" மாதப்பகுதி முதல் குறித்த பல்லப்பைக் கிராமம் ஆக்கிரமிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயமாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. பிரதான வீதிகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள இப்பாரிய இராணுவத்தளத்தினை அகற்றி தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரியே அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் ஒப்பமிட்டு மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் மகஜரை கையளித்துள்ளனர்.

குறிப்பாக படையினரது பாவனையிலுள்ள தமது வீடுகளிலுள்ள உடமைகள் சூறையாடப்படுவதாகவும் எஞ்சிய உடமைகள் தொடர்ந்தும் கொள்ளையிடப்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள அப்பகுதி மக்கள் இது தொடர்பில் ஏற்கனவே பல தடவைகள் தாம் அனைத்துத் தரப்புகளினதும் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்த போதும் எந்தத்தீர்வும் கிட்டவில்லை எனவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு -புலிகளுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து தமது குடியிருப்பு விடுவிக்கப்பட்டு விடுமென தாம் எதிர்பார்த்திருந்ததாகவும் ஆனாலும், அவ்வாறு தமது குடியிருப்புக்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். (27)

## அமைச்சின் உதவியின்றி மாணவருக்குதவ இந்துகுருமார் ஒன்றியம் தீர்மானம்

(நல்லூர்)

இந்து கலாச்சார அமைச்சின் உதவியைப் பெறாமலே சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வேண்டிய கல்வி வசதிகளை வழங்குவதென சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

முன்னாள் இந்துகலாச்சார அமைச்சர் மகேஸ்வரன் இருந்த காலத்தில் குருலத்திற்கும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது உள்ள இந்து கலாச்சார அமைச்சரால் இந் நிதி நிறுத்தப் பட்டுள்ளது. இந்து கலாச்சார அமைச்சரின் இச்செயல் கண்டிக்கத்தக்கது எனவும் கூறப்பட்டுள்ளது. (41)

## தீவகப் பகுதியில் நுளம்புப் பெருக்கம் காய்ச்சலால் பலர் வைத்தியசாலையில்

(தீவகம்)

தீவகப் பகுதி எங்கும் நுளம்புத் தொல்லைகளினால் ஒரு வித காய்ச்சல் ஏற்பட்டு பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப் பகுதிகளில் இதுவரையும் நுளம்பு மருந்து தெளிக்காமல் உள்ளதால் இந் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு வருகிறது என தீவக மக்கள் கவலை தெரிவித்தனர். (24)

## புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்கலில் மின்சார சபை இழுத்தடிப்பு

(தீவகம்)

யாழ். புங்குடுதீவுப் பிரதேசத்திற்கான மின் விநியோகத்தை வழங்குவதில் இலங்கை மின்சார சபையினர் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

புங்குடுதீவுப் பிரதேசத்திற்கு மின் வழங்குமாறு தொடர்ச்சியாக அப்பகுதி மக்களால் கோரப்பட்டுவருகின்ற போதும் இது குறித்து மின்சார சபையினர் அக்கறை காட்டாமல் இருந்து வருகின்றனர்.

இதனால் இப்பகுதிகளில் கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வோரும் மாணவர்களும் வைத்தியர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றார். (33)




# நம்ப முடிகிறதா?

"முரளிதரன் ரொம்ப நல்ல மனிதர். பந்தை எறிவுதாக அவர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கள் தவறானவை" இப்படி கருத்து தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன்

சிறிலங்கா சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் இடையிலான போட்டி கிரிக்கெட்



நல்லுலகம் அறிந்தது. அவுஸ்திரேலிய நடுவர்களால் பந்தை எறிகிறார் என முதல் தடவையாக குற்றஞ்சாட்டப்பட்ட முரளி அன்றிலிருந்து அவுஸ்திரேலியர்களின் பகைமைக்கு உரியவராக திகழ்ந்ததுடன் அந்தநாட்டுக்கெதிரான கிரிக்கெட் சுற்றுலாவிலும் இனிமேல் கலந்து கொள்வதில்லை என அறிவிக்கும் அளவுக்கு நிலைமை சென்றது.

இதற்கு அந்நாட்டுப் பிரதமரே முரளி பந்தை எறிகிறார் என குற்றம் சாட்டியிருந்தமை அவரை பெரிதும் பாதித்திருந்தது. இதெல்லாம் பழைய கதை இப்போது வோர்ன் - முரளி இருவரும் நட்புக்கு இலக்கணமாக வலம் வருகின்றனர்.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி தெற்காசியாவை உலுக்கிய சுனாமி பேரலை முரளி அவுஸ்திரேலியர்களுக்கிடையில் நட்புறவை ஏற்படுத்தி விட்டது போன்று தெரிகிறது.

முரளியை வஞ்சிப்பதிலேயே குறியாக இருந்த அவுஸ்திரேலியர்கள் அவருடன் கைகோர்த்துள்ளமை அவரைப் பொறுத்து பெருமைக்குரிய விடயமே

ஏனெனில் தனது திறமையைக் கொச்சைப் படுத்த வேண்டும் என்பதில் நீண்டகால திட்டத்தைத் தீட்டி வந்த அவுஸ். அவரது திறமையை மெச்சும் அளவுக்கு இறங்கி வருவதென்பது சாதாரண விடயமாக இருக்க முடியாது

அதாவது என்னைப் பொறுத்து இலங்கை என்றாலே முரளிதரன் அவரது முகம்.. கறுத்த பெரிய கண்கள் இலங்கை மக்களை நினைவுக்கு கொண்டு வரும் என்கிறார் வோர்ன்.

பந்தை எறிவதாக அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தவறானவை. அவர் பந்து வீசும் போது சிறிய வித்தியாசம் இருக்குமே தவிர பந்தை எறிவதில்லை என்றெல்லாம் முரளியைப் புகழ்ந்து தள்ளுகின்றார். முரளிதரன் அவுஸ்திரேலியர்களின் நட்புக்குரியவராக மாறியுள்ளமை கிரிக்கெட் உலகில் அதிசயிக்கக் கூடிய ஒன்றே. ஆனாலும் இது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது அவர்களுக்கான போட்டி ஆரம்பிக்கும் போதே தெரியவரும்.

# சாத்தியமாகுமா?

போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளின் எண்ணிக்கையை விட அதிக நாடுகளின் ரசிகர்களைக் கொண்ட விளையாட்டுக்களில் ஒன்றான கிரிக்கெட் புதிய மாற்றங்களை எதிர் கொள்ளவுள்ளது.

டெஸ்ட் போட்டி சுருங்கி ஒருநாள் போட்டியாக மாறிய பின் கிரிக்கெட் விளையாட்டுக்கு மவுசு அதிகரித்தது அதிலும் தற்போதுள்ள ஒரு நாள் கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெருமளவுக்கு விருந்தளிக்கும் வகையில் மாற்றம் செய்யபட வேண்டும் என்ற குரல் பரவலாக எழுந்துள்ளது. இதில் 15 ஓவர் களத்தடுப்பு கட்டுப்பாட்டை அதிகரிப்பது மற்றும் 20 ஓவர் போட்டிகளை நடத்துவது என்பன ஆராயப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) ஆலோசனைக் குழு தலைவராகவுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் முன் னாள் தலைவர் சுனில் கவாஸ்கர்.



இக்கருத்தைத் தெரிவித்துள்ளார் அதற்காக பல் வேறு பரிந்துரைகளையும் அவர் அளித்துள்ளார்.

1975 இல் முதல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா விளையாடியது. இங்கிலாந்து 60 ஓவர்களில் நான்கு விக்கெட் இழப்பிற்கு 334 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் இந்தியா விளையாடியது. டெஸ்ட் போட்டி ஜம்பவான் களில் ஒருவராக கருதப்படும் கவாஸ்கர் ஆட்டமிழக்காது 36ஓட்டங்களைப்பெற்றார். ஆனால் அவர் சந்தித்த பந்துகளின் எண் ணிக்கை 174 அதேசமயம் முன்னதாக ஆடிய இங்கிலாந்து வீரர் டென்னிஸ் அமில் 137 ஓட்டங்களை சேர்த்தார். கவாஸ்கரை விட 27 பந்துகள் குறைவாக சந்தித்து இந்த ஓட்டங்களை எடுத்தார்.இந்தக் காலகட்டத்தில் டெஸ்ட் போட்டிகளுக்கே அதிக மவுசு இருந்தது. அதனால் கவாஸ்கரின் அன்றைய ஆட்டம் நியாயப்படுத்தப்பட்டது.

இது தற்போது நடைபெறும் ஒரு நாள் போட்டிகளின் போது முடிவுகள் தெரிந்து விடக் கூடியதாகவுள்ளது. ஆட்டத்தின் முடிவு கடைசி வரை யாருக்கு சாதகமாக இருக்கும் என்பதை ஊகிக்க முடியாத அளவுக்கு இருந்தால் ஆட்டம் சுவாரஷ யமாக இருக்கும்.

டெஸ்ட் போட்டியில் கிரிக்கெட்டின் நுணுக்கத்தை காணலாம். ஆனால் போட்டியை ரசிக்க வேண்டுமானால் ஒரு நாள் போட்டியைத் தான் காண வேண்டும்.

முதல்15 ஓவர்களுக்கு களத்தடுப்பு கட்டுப்பாடு அதிரடி ஆட்டக்காரர்களுக்கு சாதகமானதாகவுள்ளது. அதாவது ஆரம்ப ஆட்டக்காரர்கள் அதிரடியாக அடித்து ஓட்டங்களைக் குவிக்க முடியும். அதே போன்று கடைசிப் பத்து ஓவர்களிலும் ஓட்டங்களைக் குவிக்க முடியும். இதனால் போட்டி பரபரப்பாகவும் ரசிக்கக் கூடிய மாதிரியும் இருக்கும். வீரர்கள் கடைசி வரை தமக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது போன்று ஆடுவார்கள்.

இந்த முறையை மாற்றி 15 ஓவர்கள் கட்டுப்பாட்டை சுழற்சி முறையில் வழங்குவது தொடர்பாக ஆராயப்படுகிறது. அதனை துடுப்பெடுத்தாடும் அணியே தீர்மானிப்பது இன்னும் சுவாரஷ்யமானது.

அதாவது 50 ஓவர்களில் கட்டுப்பாடுடைய 15 ஓவரையும் இடையிடையே பயன்படுத்துவது. இது போட்டியை பரபரப்பாகவும் ரசிக்கக்கூடிய வகையிலும் மாற்றும் என்பது சரியானதே.

ஆனால் இதனால் பாதிக்கப்படுவது பந்துவீச்சாளர்களே. ஏனெனில் அதிரடி ஆட்டக்காரர்களை முதல் பதினைந்து ஓவர்களில் புதிய பந்தின் மூலம் ஆட்டமிழக்கச் செய்து விட முடியும். புதிய முறையால் அந்த வாய்ப்பு கை நழுவிப் போய் விடுகிறது.

மாற்றம் இரு அணிகளுக்கும் சாதகமாக அமைகின்ற போதும் இதனால் பந்துவீச்சாளர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

# ஆசை நிறைவேறிவிட்டது

யார் இந்த வீராங்கனை என்று கேட்கிறீர்களா... டென்னிஸ் உலகின் மூத்த வீராங்கனையான அமெரிக்காவின் மார்ட்டினா நவரத்திலோவா (வயது-48)தான்.

ஹைதராபாத் ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்பதற்காக முதன் முறையாக இந்தியா வந்த நவரததிலோவா, இங்கு பெண்கள் கட்டியிருக்கும் சேலையை பார்த்து



மிகவும் ஆச்சரியமடைந்தாராம். உடனே அவருக்கும் சேலை கட்ட ஆசைவந்து விட்டது. அங்கிருந்த ஒரு பெண் ஒருவரின் உதவியுடன் பட்டுச் சேலை ஒன்றை கட்டிக்கொண்டார் பச்சை நிறபட்டுடன், பிந்தி, நெக்லஸ் அணிந்து கொண்டு விழா ஒன்றில் பங்கேற்றார். டிசேர்ட்டில் மட்டுமே இவரைப் பார்த்து பழகிய செய்தியாளர்கள் சேலையில் பார்த்ததும் சேலை கட்டிய அனுபவம் எப்படி என்று கேட்டார்களாம்.

இதற்கு பதிலளித்த மார்ட்டினா முதல் முறையாக சேலை கட்டியிருக்கிறேன். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதில் எந்த கஷ்டமும் இல்லை. அமெரிக்கா செல்லும்போது கட்டாயம் ஒரு சேலை கொண்டு செல்வேன் என்றார். இத்துடன் கொஞ்சம் கோபமாகவும் சில வார்த்தைகள் கூறியுள்ளார். சேலை எப்படி இருக்கிறது... உங்களுக்குப் பிடித்திருக்கிறதா... என்று என்னிடம் கேட்கிறீர்களே முதலில் இந்திய பெண்களுக்கே அவர்களின் பாரம்பரிய மிக்க சேலையை கட்டத் தெரியவில்லையே. இந்தியாவின் முதல் நிலை வீராங்கனை சானியா மிர்சாவிடம் சேலை எப்படிக் கட்டுவது என்று கேட்டேன். அவருக்கு சேலை கட்டவே தெரியாதாம். அவரிடம் ஒரு சேலை கூட இல்லையாம் என்றாராம்.

---

ஆசிய கிரிக்கெட்டில் பிரதான இடம் வகிக்கும் இரு நாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் மோதலில் ஈடுபடவிருக்கின்றன. இரு கிரிக்கெட் அணிகளும் பலமான அணிகளாத் திகழ்வதால் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் அமையலாம். அத்துடன் இறுதிநேரம் வரையிலும் எந்த அணி வெற்றிக்கனியைப் பறிக்கும் என்பது கூற முடியாது இருக்கும்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவரும் பிரபல துடுப்பாட்ட வீரருமான ஸ்வோ இந்தியாவே தொடர்களை வெல்லும் என உறுதியாகக் கூறியுள்ளார். இது பற்றி இப்பந்தியின் இறுதியில் ஆராயவிருக்கும் நிலையில் இரு அணிகளையும் பற்றிப் பொதுவாக ஆராய்வோமாயின் அநேகமாக தனது மண்ணில் இந்தியா போட்டிகளில் தோல்வியை சந்திக்காத நிலையில் அவுஸ்திரேலியாவுடன் கடந்த நம்பரில் அது டெஸ்ட் போட்டியில் வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்தது. இதன் காரணமாக இந்தியா பாகிஸ்தானுடன் இத் தொடரில் தோல்வியை சந்திக்க ஒரு போதும் விரும்பாது. அதற்காக் அது பெரும் எடுப்பில் அணியைத் தயார் செய்து கொள்ளும். இதன் ஒரு கட்டமாக அணிக்கு வீரர்களை தெரிவு செய்து கொள்ளும் பொருட்டு ஒரு தகுதிப் போட்டிகளையும் நடத்தியிருக்கின்றது.

அது மட்டுமன்றி கடந்த வருட ஆரம்பத்தில் பாகிஸ்தான் சென்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை வென்று வந்த பின்னர் நடைபெற்ற அவ் அணியுடன் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் தோல்வியைச் சந்தித்திருப்பது இந்திய அணிக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியதுடன் அந்தக் கணக்கைத் தீர்க்கவும் தீர்மானித்திருக்கும். அத்துடன் இப் போட்டித் தொட்ருக்கு பாலாஜினது பங்களிப்பும் கிடைக்கும் என்பதால் தனக்கே வெற்றியென இந்தியா நம்பியிருக்கலாம். அத்துடன் அவுஸ்திரேலியாவுடன் அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியை 3-0 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்த வகையில் பாகிஸ்தானின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டு வெற்றியைக் கனவாகக் காணலாம்.

எனினும் தனது மண்ணில் இந்தியாவிடம் தோல்வி கண்டதற்காக அதன் மண்ணில் அவ் அணியை வெற்றி கொள்வதே பாகிஸ்தானின் பெரும் இலக்காக இருக்கும். அதற்காகப் பாகிஸ்தான் அணியும் பெரும் தயார்ப்படுத்தலுடன் இந்தியாவுக்கு வரலாம். அவுஸ்திரேலியாவுடன் டெஸ்ட் போட்டியில் தோல்வியைச் சந்தித்த போதும் வி.பி. முக்கோண ஒரு நாள் போட்டிகளில் அவ் அணி திறமையை வெளிப்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. அவ் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் இந்தியாவின் பந்துவீச்சை சமாளிக்கக் கூடிய



வர்களே. இது கடந்த ஆண்டில் நடைபெற்ற இந்தியாவுடனான போட்டிகளில் அவதானிக்கக் கூடியதாகவே இருந்தது.

அவ்வணியின் துடுப்பாட்ட வீரர் அப்ரிடி அதிகூடிய ஆறு ஓட்டங்களை (சிக்சர்) பெற்ற வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இந்த வகையில் இரு அணிகளும் சமபலத்துடனேயே காணப்படுவது புலனாகும் நிலையில் ஸ்டிவ்வோ இந்தியாவே வெற்றியைப் பெறும் என உறுதியாகக் கூறியிருப்பது, அவர் எந்த அடிப்படையில் கூறியிருக்கிறார் என்பதை நோக்க வேண்டும். கடந்த நவம்பர் மாதம் கில்கிறிஸ்டின் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றும் வரை தனது டெஸ்ட் வரலாற்றில் இந்தியாவை அதன் மண்ணில் வீழ்த்த முடியாமல் போனமையினால் இந்தக் கருத்தை வெளியிட்டாரா அல்லது அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளில் பங்கு பற்றி நிறைய பயிற்சியை இந்தியா, பெற்றிருக்கும் என்ற ஊகத்தினாலா என்பது தெரியாது. அவ்வாறு அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளில் இந்தியா நன்கு பயிற்சி பெற்றிருக்குமாயின் பாகிஸ்தானும் அண்மையிலேயே அவ்வணியுடன் மோதியிருப்பதையும் மறுக்க முடியாது.

எனினும் டெஸ்ட் தொடரை ஒருவேளை பாகிஸ்தான் இழந்தாலும் ஒரு நாள் தொடரை அவ்வணி எளிதில் இழப்பதற்கான சாத்தியக் கூறுகள் அரிதாகவே உள்ளது.

# அதிசயம் ஆனால் உண்மை



நியூசிலாந்தின் "ஓல்ட் பிளக்ஸ்" அணியின் றக்பி வீரரான ஜோனா லோமுவைப் போன்ற ஒரு மனத்துணிவான வீரரை இன்று காண முடியாமல் இருக்கலாம்.

அவர் கடந்த சில காலங்களாக சிறு நீரகப் பாதிப்பிற்குள்ளாகி கடுமையான வருத்தம் முற்றிருந்தார். ஆயினும் அவர் தற்போது அணிக்குத் திரும்பியிருக்கிறார். இதை வியப்பிற்குரிய செய்தியாக கருதினாலும் உண்மையிலும் உண்மையாகும்.

லோமு 1994 முதல் 2002 வரை போட்டிகளில் கலந்து கொண்டார் எனினும் துரதிர்ஷ்டவசமாக அவர் நோய்வாய்ப் பட்டார் அதிலிருந்து அவர் உயிர் தப்பமாட்டார் என்று கூடச் சிலர் கருதினர். எனினும் மனவுறுதியுடன் இருந்து நோயுடன்போராடி வென்று றக்பி களத்தில் இறங்கியுள்ளார்.

அந்தவகையில் வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி அவர் போட்டியில் பங்கேற்கவிருக்கின்றார்.

இவரின் காலத்திலேயே ஜெப் வில்சன் நியூசிலாந்து கிரிக்கெட் அணியிலிருந்து நீங்கி றக்பி அணியில் இணைந்தார். இருவரும் இணைந்து நியூசிலாந்து றக்பி அணிக்கு பல சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தனர். பின்னர் லோமு நோய்வாய்ப்பட்டதும் மனமுடைந்த வில்சன் லோமு அணிக்குத் திரும்பமாட்டார் எனக் கருதி மீண்டும் கிரிக்கெட்டில் இணைந்தார். என்பதிலிருந்து லோமுவின் திறன் தெளிவாகும்.

வடிவேல்



# எல்லாரையும் கொண்டு போன கடல் என்னை மட்டும் ஏன் விட்டது

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**சுனாமி அலைகளின் இரக்கமற்ற கோரத்தனத்தால் தனது தாய், தந்தையரையும் அன்புத் தம்பியையும் இழந்து த ன்னந் தனியாக தனிமரமாக நிற்கும் முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த திருஞ்ஞானசீலம் மேரிபிறின்டா என்ற 18 வயது நிரம்பிய உயர்தரம் கற்கும் மாணவி தனது பெற்றோரை இழந்த தவிப்பை விபரிக்கிறார்.**



### பகுதி-24

கள்ளப்பாட்டுக் கடற்கரையில் இருந்து எங்கட வீடு முந்நூறு மீற்றர் தூரத்தில தான் இருக்குது. அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை எனக்கு பள்ளிக்கூடம் இல்லை. அதால எங்கட வீட்டில இருந்து நாலாவது வீடு தள்ளி இருக்கிற பெரியப்பா வீட்ட காலமை எட்டரைமணி போல போனன். அங்கபோய் பெரியப்பாக்களோட கதைச்சுக் கொண்டிருக்க என்னெண்டே தெரியேல்ல ஏதோ ஒரு பெரிய இரைச்சல் சத்தம் கேட்டது.

அந்தச் சத்தத்தை நான் அதுக்கு முதல் எங்கையுமே கேட்டதேயில்லை. அப்பிடிப் பயங்கரமான சத்தம். அதால பெரியப்பான்ர மகனிட்ட "அண்ணா வெளியால ஏதோ சத்தம் கேக்குது நேவி தான் வந்து நிண்டு அடிக்கிறானோ தெரியாது ஒருக்கால் என்னெண்டு பாருங்கோ" எண்டு சொன்னன்.

அண்ணா வெளியால போய் நிண்டு "என்னெண்டு தெரியேல்ல சனம் எல்லாம் ஓடிவருது நாங்களும் எல்லாரும் ஓடுவம் ஓடுங்கோ" என்று கத்திக்கொண்டு ஓடினார். அவர் ஓட நாங்களும் அவருக்குப் பின்னால ஓட வெளிக்கிட்டுட்டம்.

நான் கேற்றடிக்கு வர கடற்கரை பக்கத்தில இருந்து ஓடி வந்த சனங்கள் "ஐயோ புயல் கலைக்குது கடல் கொந்தளிச்சு எழும்பி நிக்குது. புயலோட சேர்ந்து கடலும் ஊருக்குள்ள பறந்து வருது. உதுக்குள்ள அம்பிட்டால் ஒருத்தரும் தப்பமாட்டம் எங்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேணும்." எண்டு கத்தியபடி ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் எல்லோரும் நெரிபட்டு ஓடிக்கொண்டிருந்தனர். சிலர் கால்களுக்குள் தடக்குப்பட்டும் விழுந்து எழும்பி ஓடிக்கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்த உடனயே எங்கட வீட்டு ஞாபகம் தான் வந்தது. அப்பாவும், அம்மாவும், தம்பியும் வீட்டில இருந்தவையள். அவயளுக்கு இது தெரியுமோ தெரியாது எண்டு நினைச்சு எங்கட வீட்டடிக்கு ஓடிப்போனேன். நான் அங்கபோக அப்பாவும், அம்மாவும் வீட்டுக்கேற்றடிக்கு ஓடிவந்திட்டினம். தம்பியக் காணேல்ல அவன் எங்க எண்டு அப்பாட்டக் கேட்டன். அப்பா சொன்னார் "தம்பி விளையாடப் போனவன் எங்க எண்டு தெரியாது இப்ப நீங்கள் ஓடித் தப்புங்கோ அவன் எப்பிடியும் வருவான்" எண்டு சொல்லிக்கொண்டு அப்பா அம்மாவையும் கூட்டிக்கொண்டு ஓடிவந்தார்.

கொஞ்சத்தூரம் தான் ஓடியிருப்பம். எங்கட அம்மாவுக்கு ஏற்கனவே வாதம் நடக்க மாட்டா, கன நாளா நடக்க ஏலாமல் கஷ்ரப்பட்டு இருந்தவ கனக்க வைத்தியங்கள் எல்லாம் செய்து கொஞ்ச நாளைக்கு முன்னுக்குத் தான் நடக்க வெளிக்கிட்டவா. அதுவும் மெல்லமெல்லமா தான் நடப்பா. அப்பிடிக் கஷ்ரப்பட்டவா அவாவை அப்பா கையில தாங்கினபடி ஓடிவந்தவர்.

அப்பிடி இருந்தும் ஓடிவரேக்குள்ள தடக்குப்பட்டு அப்பாவும், அம்மாவும் விழுந்து போச்சினம். அப்பா அம்மாவை எழும்பச்சொல்லி கையைப் பிடிச்சு தூக்கினவர். அம்மாவால எழும்பவே ஏலாமல் இருந்திருக்க வேணும். இதைப் பார்த்த உடனே நான் திரும்பி வந்து அம்மாவுக்குப் பக்கத்தில நிண்டன்.

நான் அம்மாவுக்குப் பக்கத்தில வர கடல் பெரிசா இரைஞ்சுகொண்டு வந்து அடிச்சது. அடிச்ச அடியோட நான் அப்பா, அம்மா ஆக களை எல்லாம் விட்டுப் பிரிஞ்சு போனன். என்னை அடிச்சுக்கொண்டு போன தண்ணி வீட்டளவு உயரம் வரும். அது அடிச்ச அடியோட என்னைத் தூக்கிக்கொண்டு போய் ஒரு ஓலை வீட்டுக்குப் பின்னால போட்டுது.

அதுக்குள்ள இருந்து அந்த வீட்டுத் தடியில பிடிச்சுக்கொண்டு நிக்க நான் எதிர் பார்க்காத மாதிரி அந்த வீடு எனக்கு மேல விழுந்து கஞ்சலுகளாள் எல்லாம் மூடிப்போட்டுது என்னால ஒண்டுமே செய்ய ஏலாமல் பேட்டுது. நான் இதுக்குள்ள சிக்குப்பட்டு சாகப்போறன் எண்டு தான் நினைச்சன். வீட்டுக்குள்ள இருந்து வெளியால வரச்சரியா கஷ்ரப்பட்டன். சரிவரேல்ல. பிறகு பார்த்தால் கடல் தண்ணி என்னை அந்த கஞ்சலுக்குள்ள இருந்து எப்பிடித்தூக்கிச்செண்டு தெரியாது. ஏதோ மேல தூக்கி எங்கயோ இழுத்துக்கொண்டு போச்சுது.



தண்ணி இழுத்த பக்கம் எல்லாம் நானும் போய்க்கொண்டிருந்தேன். இப்பிடி இருக்க ஒரு பெரிய பனை வடலிக்குக் கிட்ட என்னைக் கொண்டு போக நான் அந்த வடலியை எட்டிப் பிடிச்சிட்டன் அதைப் பிடிச்ச உடனயும் தண்ணி என்னை இழுத்தது. ஆனால் நான் கையை விடவே இல்லை. கையை விட்டிருந்தால் நான் உயிரோட தப்பியே இருக்க மாட்டன்.

நான் பனை வடலியில் இருக்கேக்க ஒரே அவலச்சத்தம்தான் கேட்டது. எங்க பாத்தாலும் கத்தி அழுது கொண்டிருக்கிற சத்தம் தான்.அந்தச் சத்தத்தை கேட்க என்னால பொறுக்க ஏலாமல் இருந்தது என்ன செய்ய முடியும்.

பனை வடலியில எட்டிப் பிடிச்சுக்கொண்டு நிண்டு என்ர தம்பியையும் அப்பா, அம்மாவையும் தான் தேடித்தேடிப் பார்த்தன். ஆனால் அவையைக் காணவே இல்லை. அவையளும் என்ன மாதிரி இப்பிடி எங்கயாவது மரத்தில பிடிச்சுக் கொண்டு தப்பி இருப்பினம் எண்டு என்ர அடிமனதில நினைச்சு வைச்சிருந்தன்.

இப்பிடியே கொஞ்ச நேரம் கழிய தண்ணி வத்திட்டுது. அந்த வடலியில இருந்து எப்பிடி இறங்கினேனோ தெரியாது. ஏதோ இறங்கிப்போட்டன். இறங்கின பிறகு இடுப்பளவு தண்ணிக்குள்ளால நடந்து போக ஒரு தெரிஞ்ச அண்ணா வந்தார். அவரிட்ட எங்கட அப்பாவைக் கண்டநீங்களா? எண்டு கேட்டன். அவர் "அவையைக் காணேல்ல நீங்கள் வாங்கோ உங்களைக் கூட்டிக்கொண்டு போய் விடுறன்" எண்டு சொல்லி என்னைக் கூட்டிக் கொண்டு போய் ஆஸ்பத்திரி அடியில விட்டுட்டுப் போட்டார். அங்க இருந்து வந்து எங்கட பெரியம்மா ஆக்களோட முகாமில இருக்கிறன்.

அண்டைக்குப் பிறகு என் அப்பா, அம்மா, தம்பி ஒருத்தரையும் காணேல்ல. எவ்வளவு கஷ்ரப்பட்டு எங்களை வளர்த்த அப்பா இப்ப இல்லை. பிள்ளையள் படிக்க வேணும், படிச்சு நல்ல உத்தியோகம் பார்க்க வேணும். நல்லாய் இருக்க வேணும் எண்டு அடிக்கடி சொல்லி எங்களை நோக விடாமல் எங்களுக்கு தேவையான எல்லாத்தையும் வேண்டித்தந்து பாத்த அப்பா, அம்மா இப்ப இல்ல. எங்களுக்காக தங்களை வருத்தி ஓடாய் தேஞ்சு உழைச்ச அவையள நான் ஒரு நாளும் இழக்கக் கூடாது. எண்டைக்கும் அவையள் என்னோட இருக்க வேணும். அவையள கடைசிக்காலத்தில சந்தோசமா வைச்சிருக்க வேணும் எண்டெல்லாம் நினைச்சு வைச்சிருந்தன். ஆனால் அவையள் எல்லாரும் என்னைத் தனியா தவிக்க விட்டுட்டு போட்டினம்.

ஒவ்வொரு நாளும் நான் அப்பா, அம்மா எண்ட சொல்லை எத்தின தரம் சொல்லி கூப்பிட்டு சந்தோசப்பட்டிருப்பன். இனி அந்தச் சொல்லை நான் சொல்லவே ஏலாது. இனி ஆரை நான் அப்பா, அம்மா எண்டு கூப்பிடுறது. என்ர ஆசைத் தம்பி அவனை நல்லவனாய் வளர்க்கவேணும் எண்டு நினைச்சு அவனுக்கு எத்தின புத்திமதியளச் சொல்லி இருப்பன். என்ர தம்பிக்கு எத்தின நாள் நான் சாப்பாடு தீத்தி இருப்பன். எனி நான் ஆருக்கு சாப்பாடு தீத்திறது. ஆரோட பள்ளிக்கூடம் போறது. நான் பள்ளிக்கூடம் போகேக்க என்னோட கூட வாற என்ர தம்பி அவனும் என்னை விட்டுப் பிரிஞ்சு போட்டான்.

எல்லோரும் போகேக்க ஏன் என்னைத் தனியா விட்டுட்டுப் போனவை என்னையும் கூட்டிக்கொண்டு போயிருக்கலாம் தானே? இனி எனக்கு ஆர் இருக்கினம். எல்லாருமே என்னை விட்டுட்டுப் போட்டினம். நான் தனியா ஏன் இப்பிடி இருக்கிறன்.

பனை வடலியில இருக்கேக்க கேட்ட அழுகைச் சத்தம் எல்லாத்தையும் நான் இப்பவும் நினைச்சு அழுறன். அந்தச் சத்தத்தோட என்ர அப்பா, அம்மா தம்பி ஆக்களின்ர சத்தமும் சேந்து கேட்டிருக்குமோ

**அ.லோகீசன்**

என்னை மாதிரி எங்கயாவது மரங்களில பிடிச்சு தப்பி இருப்பினம் எண்டு நினைக்க அவையள் எல்லாரும் என்னை தனியா விட்டுட்டுப் போச்சேந்திட்டினம். என்று தனது பெற்றோரின் சகோதரனின் உயிரைப் பறித்த கடலின் கோரத்தை சொல்லிப் புலம்பினாள் அந்த உயர் தரமாணவி.


சுனாமி அலைகள் முல்லைத்தீவை மூழ்க்கடித்த சொற்ப நேரத்தில் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று மீட்ப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்ட தமிழீழ கடற்படையின் மகளிர் அணிப் போராளி ஒருவர் தான் முல்லைத் தீவுக்குள் எப்படிப் போனார்? போகும் போது எத்தகையசிரமங்களை சந்தித்தார்? மீட்புப்பணியின் போது கண்ட காட்சிகள் என்ன? சற்று வித்தியாசமான தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அவர்பகிர்ந்தவற்றை அடுத்தபகுதியில் உங்களுக்கு தருகிறோம்.

**தொடரும்**



# தென்மாகாண அமைச்சரின் வாகனத்தில் சுனாமி உதவிப்பொருட்கள் கடத்தல்

சுனாமி அனர்த்த நிவாரண நிதி மற்றும் உதவிப்பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியாகச் சென்றடையவில்லை என்ற அரசின்

மீதான குற்றச்சாட்டு தென்னிலங்கையிலும் வலுத்துள்ளவேளையில் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே லீடர்' ஆங்கிலப் பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஒரு படம் அரச வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக் கிறது. காலி கோட்டை வளாகத் தினுள் இயங்கும் தென்மாகாண போக்குவரத்து, சக்தி, கூட்டுறவு அமைச்சு அலுவலகத்திலிருந்து அதன் பின்புறமுள்ள பத்து அடி உயரமுள்ள மதிலுக்கு மேலால் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவது படம் பிடிக்கப்பட்டுள்ளது. அப்பொருட்கள் சனாதிபதியின் கட்சியைச் சேர்ந்த தென்மாகாண அமைச்சர் யு.டி.ஜி.ஆரியரட்ணவின் உத்தியோகபூர்வ வாகனத்தில் ஏற்றப்படுவதும் அந்த வாகனத்தின் இலக்கத்தகட்டுடன் ஆதாரமாகியுள்ளது.

# மாணவர்களை அனுமதிப்பதில் 125 பாடசாலைகளில் முறைகேடு

சிறிலங்காவில் இந்த வருடம் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பாக 125 பாடசாலைகளில் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக அறியப்படுகிறது. இது தொடர்பாக அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 1000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் இதுதொடர்பான விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## துயர் பகிர்கிறோம்



## திருமதி அன்னப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை

எமது பாடசாலை அதிபர் திரு ஆ.ஜீவஜீலன் அவர்களது பாசமிகு தாயார் திருமதி அன்னப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சபையினர்,
மு/ஒதியமலை அ.த.க.பாடசாலை,
நெடுங்கேணி. (5687)

# பொலிசாரின் கட்டளையை மீறி சென்றவர்கள் மீது தாக்குதல்!

## வென்னப்புவவில் ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

(கொழும்பு)

பொலநறுவ வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை சிறிலங்காப் பொலிசாரின் கட்டளையை மீறிச் சென்றவர்கள் மீது பொலிசார் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். இனந்தெரியாத குழுவொன்று இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் தப்பிச்சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்; வென்னப்புவ பிரதேசத்தில் பொலிசாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானதுடன் மற்றொருவர் காயமடைந்ததோடு மற்றைய இருவரும் தப்பிச்சென்று விட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரிடமிருந்து ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக வென்னப்புவ பொலிஸ் தலைமையக பரிசோதகர் ஜே.ரி சோமரத்ன தெரிவித்தார்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு கணினிகள், செல்லிடப்பேசிகள் அன்பளிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது உடமைகள் அனைத்தும் இழந்த இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஐவருக்கு கணினிகள், செல்லிடப்பேசிகள் ஆகியன கடந்த சனிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மாலை 6.30 மணியளவில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், ஆழிப்பேரலையால் தமது உடமைகளை இழந்த கல்முனையைச் சேர்ந்த குணராஜா (செய்தியாசிரியர்-தினகரன்), யாழ்ப்பாணம் செம்பியன் பற்றைச் சேர்ந்த எஸ்.தவச்செல்வம் (செய்தியாளர்- ஐ.பி.சி லண்டன்), மட்டக்களப்பு பாண்டிருப்பைச் சேர்ந்த எஸ்.துஷ்யந்தன் (ஊடகவியலாளர் தினக்குரல்), அம்பாறை திருக்கோவிலைச் சேர்ந்த ஏ.எம். சலீம் (ஊடகவியலாளர்-தினக்குரல்), கொழும்பு மட்டக்குளியைச் சேர்ந்த நெவில் அன்ரனி (ஊடகவியலாளர்- சக்தி எஃப்.எம்) ஆகியோருக்கு கணினிகள், செல்லிடப்பேசிகள் வழங்கப்பட்டன. இவர்களுக்குரிய இலவசக் கணினிகளை தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் தலைவர் த.ரவிசங்கர், நிதிப்பணிப்பாளர் உ.ஜெயதீபன், பணிப்பாளர் இ.ஜனந்தன், உலக தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் தலைவர் முத்துநெடுமாறன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தனது நிதியில் இருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பண உதவியையும் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# நாட்டைக் கட்டியெழுப்ப ஐ.தே.க உதவும் காலியில் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

ஐ.தே.க பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவமுடியுமெனவும் ஆனால் இவ் உதவி உலக வங்கி சர்வதேச நாணய நிதியம், ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு வங்கி ஆகியவற்றின் அறிக்கைகளின் அடிப்படையில் இருக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலிமாவட்டத்திற்கு விஜயம் செய்த பின்னர் அவர் மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்;உதவியின் ஒரு பகுதி உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் நன்மையடைய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தமிழீழ நுண்கலைக் கல்லூரி முல்லை மாவட்டம் - முள்ளியவளை

## புதிய மாணவர்கள் இணைப்பு

முல்லை.மாவட்ட நுண்கலைக்கல்லூரியின் முள்ளியவளை நுண்கலைக்கல்லூரிக்கு 2005 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைக்கவுள்ளோம். கீழ்வரும் கலைப்பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

01.வாய்ப்பாட்டு
02.வயலின்
03.மிருதங்கம்
04.வீணை
5.நடனம்

* 20.02.2005 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும். அதி உச்ச அடைவு மட்டம் வேண்டி, மாணவர்கள் நேர்முகத்தேர்வின் பின்பே அனுமதிக்கப்படுவர். படிமுறை (அல்லது தரம்) 1 இல் ஆகக்குறைந்தது 8 வயதிற்கு மேலே உள்ளவர்களே இணைக்கப்படுவர்.

* வட இலங்கை சங்கீத சபைத் தேர்வின் 4 ஆம் தரம் சித்தி பெற்றோர் நுண்கலைக் கல்லூரியின் 5 ஆம் படிமுறைத் தேர்வில் இருந்து கற்கையைத் தொடரலாம். வ.இ.ச.சபைப் பரீட்சையில் ஆசிரியர் தரம் சித்தி பெற்றோரும், யாழ்.பல்கலைக்கழக இராம நாதன் நுண்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றோரும் 7 ஆவது படிமுறையான ஆற்றுகைத் திறன் பகுதிக்கும், அவைக் காற்றுத் தேர்வுப் பகுதிக்கும் தோற்றி பயிற்சியை நிறைவு செய்துகொள்ளலாம். இப்பகுதிக்கு தோற்றுவோர் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நேரிலோ, தபால்மூலமோ தகுதிச்சான்றிதழ்களுடன் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

15.02.2005
திகதி

சங்கீத பூஷணம்,
திரு.ச.பாலசிங்கம்,
(அதிபர் முல்லை.மாவட்ட நுண்கலைக் கல்லூரி, முள்ளியவளை)

(சி.11318)

# நக்சலைட்டுக்களின் பிரச்சினையை ஒழிக்க மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளது

**–இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்**

(புதுடில்லி)

பல மாநிலங்களில் தீவிர பிரச்சினையாகவுள்ள நக்சலைட்டுக்கள் பிரச்சினையை ஒழித்துக் கட்ட மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளது என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். "நக்சலைட்டுக்கள் பிரச்சினையை ஒழிக்கக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி விமான நிலையத்தில் பிரதமர் மன்மோகன் சிங் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் மேலும் கூறியதாவது:- தீவிரவாத தடுப்புச் சட்டமான 'பொடோவை' ...ுச் செய்ததால் தான் தீவிரவ... ...டவடிக்கைகள் அதிகரித்து விட்டதாக கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள இயலாது. இதில் உண்மை இல்லை என்பது எல்.கே. அத்வானிக்கு நன்றாகவே தெரியும்.

நக்சலைட்டுக்கள் பிரச்சினை பல மாநிலங்களில் தீவிர பிரச்சினையாக இருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்த அதிக பட்சமாகத் தேவையான ஒத்துழைப்பு அளிக்க மத்திய அரசு தயாராக இருக்கின்றது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாநிலங்களுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டுள்ளது.

மாநில அரசுகளுடன் மத்திய அரசு இணைந்து நக்சலைட்டுக்கள் பிரச்சினைகளை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரிவான செயற் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இது பற்றி எதிர்க்கட்சிகள் ஏதாவது ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்பினால் அவர்களுடன் பேச எந்த வித தயக்கமும் இல்லை என தெரிவித்த பிரதமர் மன்மோகன் சிங் நேபாளத்தில் நிலவி வரும் அரசியல் பிரச்சினை இந்தியாவுக்கு கவலை அளித்துள்ளது. மன்னர் மற்றும் பல கட்சி அரசியல் அடிப்படை அமைப்பு நேபாள அரசியலின் இரு பெரும் தூண்கள் என்பதை நாங்கள் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம் என மேலும் தெரிவித்துள்ளார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் பிளவு இருப்பதாக கூறப்படுகிறதே? என்று பிரதமர் மன்மோகன்சிங்கிடம் நிருபர்கள் கேட்டனர். இதற்கு மன்மோகன் சிங் பதில் அளிக்கையில், "ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பலமாக உள்ளது. கூட்டணிக் கட்சிகளால் எனது அரசுக்கு மிரட்டல் எதுவும் இல்லை என்று தெரிவித்தார்.

## காஷ்மீரில் கடும்பனிப் பொழிவு பதின்னான்கு பேர் பலி



காஷ்மீரில் கடும்பனிப் பொழிவினால் பல இடங்களில் பனிப்பாறைகள் சரிந்து வருகின்றன. ஸ்ரீநகர் அருகே உள்ள ஜவகர் குகைப்பாதையில் பனிப்பாறைச் சரிவில் இராணுவ வாகனங்கள் சிக்கியதில் 14 பேர் பலியாயினர். பல இடங்களில் பனிப்பாறை சரிவு ஏற்பட்டதால் இங்குள்ள தேசிய நெடுஞ்சாலையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் மலைப்பாதையில் காத்திருக்கின்றன.

## ஆப்கான், பாக் செல்லும் இந். வெளியுறவுத்துறை அமைச்சர்

(புதுடில்லி)

வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் மூன்று நாள் பயணமாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்குச் செல்கிறார்.

ஆப்கானிஸ்தானுக்கு இன்று செல்லும் நட்வர்சிங் அந்நாட்டுப் பிரதமர் ஹமீத் கர்சாய், வெளியுறவு அமைச்சர் அப்துல்லா ஆகியோரைச் சந்தித்துப் பேசுகிறார். ஆப்கானிஸ்தான் உட்கட்டமைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கவுள்ளார். ஆப்கான் விஜயம் முடிந்ததும் 16மற்றும் 17ஆம் திகதிகளில் பாக்.கில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அங்கு பாக் வெளியுறவு அமைச்சர் முகமது கசூரி உட்பட பல முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். ஸ்ரீநகர்- முசாபர்பாத் இடையேயான பேருந்து போக்குவரத்து தொடங்குவது குறித்தும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிகிறது.

## ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு.க பொதுக்குழு கூடுகிறது

அ.தி.மு.க செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்கள் இன்று சென்னை வட பழனியில் உள்ள விஜயசேஷ மகாலில் நடைபெறுகின்றது. இதற்கு அவைத் தலைவர் பொன்னையன் தலைமை தாங்கு கிறார். அ.தி.மு.கபொதுச் செயலாளரும், முதல் அமைச்சருமான ஜெயலலிதா முன்னிலையில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. சுனாமியால் இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்படும்


**கரைச்ி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பரந்தன்**

பதிவு எண். பிஏ. 047 திகதி:- 1971.02.10

# எழுதுநர் பதவி (பயிலுநர்)

**கல்வித் தகைமை:-**

01) க.பொ.த (சாதாரணம்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம்/ கணிதம், தமிழ்மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

02) க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்தவர்களும், கூட்டுறவுப் பயிற்சி சாதாரணம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**வயது:- 18-35**

* சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் தலைவர், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என்னும் முகவரிக்கு 2005.02.26 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் சுயமான கையெழுத்துடன் அனுப்புதல் வேண்டும்.

*தலைவர்*
*கரைச்சி வடக்கு ப. நோ. கூ*
*சங்கம்,*
*பரந்தன்.*

*(சி.11336)*



# கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் (வ/து)

**பதிவு இல:பிஏ-1972.02.10**

## பதவி வெற்றிடம்

1.பதவி:-கணக்குப் பதிவாளர்
2.சம்பளக்குறி இல:-301/10
3.சம்பள அளவுத்திட்டம்:-(4750-100 10-110.10 6850) 1250 /=
4.தகைமை:-

1.கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது 12 ஆவது சம்பளத்திட்டத்தில் குறிப்பிட்ட பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

2.ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல்/ குறிப்பிட்ட நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் கணக்கியல்/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கியல் துறையில் 4 வருடத்திற்குக் குறைய்யாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

3.கூட்டுறவுப்பயிற்சி உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். /க.பொ.த (உ/த) கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்துள்ளதுடன், கணக்கியல் வேலைகளில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

5.வயதெல்லை:-23-45 வரை (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)

1. பதவி:-பாரவூர்தி சாரதி
   சம்பள குறி.இல:-312/13
   சம்பள அளவுத்திட்டம்:-(4000-75 10 80 10-5700) 1250/=
   தகைமை:- 5ஆம் வகுப்புச் சித்தியுடன், பாரவூர்தி, உழவு இயந்திரம் ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்துடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.
   வயது:-21-45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், பரந்தன் எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ 28.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**க.வ.ப.நோ.கூ. சங்கம்,**
**பரந்தன்.**

*(சி.11337)*

# இங்கிலாந்துக்கு எதிரான ஏழாவது ஒரு நாள் போட்டி தென்னாபிரிக்க அணி மூன்று விக்கெட்டால் வெற்றி



இங்கிலாந்து அணிக்கு எதிராக செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஏழாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் மூன்று விக்கெட்டுக்களால் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணி ஒருநாள் தொடரை 4-1 என்ற நிலையில் தனதாக்கிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தடுமாறு இங்கிலாந்து அணியை அழைத்தது. இதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்ப விக்கெட்டுக்கள் குறைந்த ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டன. எனினும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் பீற்றர்சன் 116 ஓட்டங்களை குவித்தார்.


41.5 ஓவரில் இங்கிலாந்து அணி சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களை பெற்றது.

பந்து வீச்சில் அன்ருஹோல் மூன்று விக்கெட்டுக்களையும் நிற்றினி, அன்ருபெல் ஆகியோர்



தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.


பதிலுக்குதுடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49 ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்பிற்கு



241 ஓட்டத்தை பெற்று வெற்றியீட்டியது.தென்னாபிரிக்கா துடுப்பாட்டத்தில் பிறின்ஸ் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களையும், சிமித் 47 ஓட்டங்களையும், பௌச்சர் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வார்ப் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். மேற்படி வெற்றியுடன் 4-1 என்ற எண்ணிக்கையில் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா.

# பாக்.கிரிக்கெட் சபையின் உத்தரவை அக்தர் மறுத்தார்




உள்ளூர் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உத்தரவை புறக்கணித்தார் சொஹைப் அக்தர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணிஇம் மாதம் 25ஆம்திகதி இந்தியப் பயணம் செல்கிறது. வீரர்களின் உடல் தகுதியை சோதிப்பதற்காக பயிற்சிப்போட்டிகள் நடத்துகிறது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. உள்ளூர் அணிகள் மோதும் பயிற்சிப்போட்டி நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்று தனது உடல் தகுதியை நிரூபிக்கவேண்டும் என. வேகப் பந்துவீச்சாளர் சொஹைப் அக்தருக்கு கிரிக்கெட் சபை உத்தரவிட்டது.

ஆனால் அக்தர் இந்த உத்தரவைப் புறக்கணித்தார். உள்ளூர்ப் போட்டியில் அக்தர் பங்கேற்கமாட்டார் என அறிவிப்பு நேற்று முன்தினம் அவர் தரப்பில் இருந்து வெளியாகியுள்ளது.

"அக்தர் காயத்தால் அவதிப்படுகிறார் முக்கியத்துவம் வாய்ந்த இந்தியப் பயணத்தில் அவர் பங்கேற்க வேண்டுமானால் வரும் 18ஆம் திகதி வரை முழுஓய்வெடுக்கவேண்டும் என டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இது தெரிந்தும், உள்ளூர் போட்டியில் பங்கேற்க கிரிக்கெட் சபை தரப்பில் இருந்து நிர்ப்பந்தம் செய்வது சரியல்ல , என்று அக்தர் தரப்பில் நேற்று முன்தினம் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# நியூசிலாந்துக்கான அவுஸ்.குழாமில் ஹெய்டன் இடம்பெறுவது சந்தேகம்



சில காலமாக துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறிவரும் அவுஸ்திரேலிய அணியின் மத்தியூ ஹெய்டன் நியூசிலாந்திற்கெதிரான அவுஸ்திரேலிய குழாமில் இடம் பெறுவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

குயின்ஸ்லாந்திற்கெதிரான உள்ளூர் ஒருநாள் போட்டியிலும் பிரகாசிக்கத் தவறிய ஹெய்டன் நியூசிலாந்திற்கு விஜயம் செய்யும் அவுஸ்திரேலிய குழாமில் இடம் பெறமாட்டார்என்று கருதப்படுகின்றது. உபாதைகளை எதிர்கொண்டுள்ள ஹெய்டன் ஓய்வு பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளார்.அவரது உடற் திடநிலை குறித்து அணி மருத்துவர் இன்று ஆய்வு செய்யவுள்ள போதிலும் அணியில் இடம் பெறுவது குறித்த முடிவு தெரிய வர சில நாட்கள் செல்லும் எனக் கூறப்படுகின்றது.

# நல்ல அணித்தலைவர் நல்ல ஆசிரியர் கங்குலி, சச்சினை புகழ்கிறார் இன்சமாம்



இந்தியப்பயணம் வருவதற்கு முன்னதாகவே இந்திய அணி வீரர்கள் பற்றி புகழ்ந்து தள்ளுகிறார் இன்சமாம் உல்ஹக். பாகிஸ்தான் கிரிக்கெட் தலைவர் இன்சமாம் உல்ஹக் விளம்பரப் படத்தில் நடிக்க கொல்கட்டா சென்றிருந்தார். மூன்று டெஸ்ட் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக அவரது அணி 25ஆம்திகதி இந்தியா செல்கிறது. இந்தத் தொடர்பற்றி இன்சமாம் தெரிவிக்கையில்:

சச்சின் இன்னும் காயத்தில் இருந்து முழுமையாகக் குணமடையவில்லை என்று கேள்விப்பட்டேன். கிரிக்கெட் ரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கப்படும் தொடர்இது. ஆகவே 50 சதவீதம் குணமடைந்து விட்டால் கூட, அவர் கட்டாயம் விளையாட வந்துவிடுவார் என்று நம்புகிறேன். அணியில் அவர் இருப்பதே இந்திய வீரர்களுக்குத் தனிப்பலம்.

தனி நபராக பல போட்டிகளில் எங்களை அவர் தோற்கடித்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் சச்சின் துடுப்பாட்டம் செய்யும் போதும் பல புதிய விடயங்களை துடுப்பாட்டநுணுக்கங்களை அவரிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம் கிரிக்கெட்டைப் பொறுத் தவரை அவர் மிகச் சிறந்த ஆசிரியர்.

நான் பார்த்து வியக்கும் மற்றொருவர் சவுரவ் கங்குலி இப்போதைக்கு உலகின் மிகச்சிறந்த தலைவர் யாரென்று கேட்டால் தயக்கமே இன்றி அவரைத்தான் சுட்டிக்காட்டுவேன். இந்திய வீரர்களுக்கு தன்னம்பிக்கை அளித்து அவர்களை மேட்ச் வின்னர்களாக்கியதில் சவுரவ் பங்கு முக்கியமானது. தனிநபரைச் சார்ந்து இந்தியா இப்போது இல்லை. இதற்குக் காரணம் சவுரவ் கங்குலி மட்டுமே இவ்வாறு தெரிவித்தார் இன்சமாம்.-



சுனாமி நிவாரண நிதி திரட்டுவதற்காக இலங்கை அரசுகண்காட்சி கிரிக்கெட் போட்டி நடத்துகிறது. சுனாமி அலைகளால் சேதமடைந்த காலி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. சுனாமியில் உயிர் தப்பியவர்கள், இலங்கை வீரர்கள் இடையே போட்டி நடந்தது. போட்டி தொடங்கும் முன்னதாக இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து (வலது ஓரம்) உட்பட இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்கிறார் நிவாரணப் பணிக்காக இங்கு வந்துள்ள அவுஸ்திரேலிய பிரதிநிதி ஜான் பிரம்பி (இடமிருந்து இரண்டாவது)

# ஸ்பானிஷ் லீக் கால்பந்து போட்டி பார்சிலோனா அபாரவெற்றி

ஸ்பானிஷ் லீக் கால்பந்துப் போட்டியில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது. பார்சிலோனா அணி கழக அணிகள் பங்கேற்கும் ஸ்பானிஷ் லீக் கால் பந்துத் தொடர் ஸ்பெயின்நாட்டின் மாட்ரிட் நகரில் நடக்கிறது. பார்சிலோனா, சாரகோஸா அணிகள் நேற்று முன்தினம் மோதின. இந்தத் தொடரில் பிரமாத ஆட்டத்தை வெளிப்படுத்தும் பார்சிலோனா வீரர்கள் முன் சாரகோஸா அணி தாக்குப்பிடிக்க முடியவில்லை.

பார்சிலோனா தரப்பில் கமரூன் வீரர் சாமுவேல் இடோ, பிரேசில் வீரர் ரொனால்டினோ மிகச்சிறப்பாக ஆடினர். ஆட்டநேர முடிவில் பார்சிலோனா 4-1என்ற கோல் கணக்கில் சாரகோஸாவை வீழ்த்தியது. இந்த வெற்றி மூலம் ஏழு புள்ளிகளுடன் இந்தத் தொடரில்தொடர்ந்து ஆதிக்கம்செலுத்துகிறது பார்சிலோனா அணிக்கு அடுத்தபடியாக, ரியல் மாட்ரிட் அணி இரண்டாவது இடம் வகிக்கிறது.



## விளையாட்டு

### ரஷ்யவீராங்கனை சாதனை

ரஷ்யாவை சேர்ந்த ஒலிம்பிக் சம்பியனான யெலீனா இசின்பயெவா தடியூன்றிப்பாய் தல்பந்தயத்தில்உலகஉள்ளரங்க போட்டியில் எட்டு முறை உலக சாதனை படைத்துள்ளார். தற்போது யெலீனா தனது பழைய சாதனையை (4.83 மீட்டர்) முறியடித்து புதிய உலக சாதனை (4.87 மீட்டர்) படைத்துள்ளார். உக்ரைனில் நடந்த உலக உள்கை விளையாட்டு அரங்க போட்டியில் இதனை படைத்துள்ளார்.

### இறுதிப்போட்டிக்கு ரொடிக்

ஜான் ஜோஸ் ஏ.டி.பி.ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் அரை இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீரர் ஆன்டி ரொடிக் (அமெரிக்கா) 7-6,6-3 என்ற நேர் செட்டில் டாமி ஹாஸ்சை (ஜெர்மனி) தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# அசாருதீனின் சாதனையை மறக்க முடியாது கபில்தேவ்



கிரிக்கெட்டில் அசாருதீன் செய்துள்ள சாதனைகளை ஒதுக்கி விடமுடியாது என்கிறார் கபில்தேவ். சுனாமி நிவாரண நிதிக்காக கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார் கபில்தேவ். இதற்காக டேராடூன் வந்திருந்த கபில், "இந்தியக்கிரிக்கெட்டில் முன்னாள் தலைவர் அசாருதீன் செய்துள்ள சாதனைகளை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது 15 ஆண்டுகள் அவர் கிரிக்கெட் விளையாடியிருக்கிறார். ஒருநாள் டெஸ்ட்போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்திருக்கிறார். இதெல்லாம் சாதாரணமில்லை. அவர் மீதான ஊழல் புகார்கள் இன்னும் நிருபிக்கப் படவில்லையே? என்று தெரிவித்தார்.

# நம்பிக்கையூட்டும் கால்பந்து போட்டி பார்சிலோனாவில் இன்று நடக்கிறது


சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவும் வகையில் சர்வதேச கால்பந்து வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்ட போட்டி ஒன்று பார்சிலோனாவில் இன்று நடைபெறுகின்றது.

நம்பிக்கையூட்டும் கால்பந்தாட்டம் என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த போட்டியில் 50இற்கு மேற்பட்ட சர்வதேச கால்பந்து வீரர்கள் கலந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போட்டியில் பங்கு பற்றும் தெரிவு செய்யப்பட்ட ஒரு அணிக்கு பிரேசில் வீரர் ரொனால்டினோவும்,மற்றைய அணிக்கு உக்ரைன் வீரர் அன்ருடிற்றின்கோவும் தலைவர்களாக விளையாடவுள்ளனர்.

நம்பிக்கையூட்டும் கால்பந்து போட்டிமூலம் திரட்டப்படும் நிதியும் அன்பளிப்பு நிதியும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள கால்பந்தாட்ட சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அதற்கு முன்னதாக இந்த நிதி சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்தாட்ட பேரவை சுனாமி பொறுப்பு நிதியத்தில் வைப்பிலிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



**சிந்தனைக்கு**

கலாசாரம் உயர்நிலை பெறுவதாயின்,
கலாசார மறுமலர்ச்சி அவசியம்;
கலாசாரப்புரட்சி அவசியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-02-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# வெறுப்பின் உச்சியில்?

" வடக்கு-கிழக்குப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முற்படும்போது அரசாங்கத்தில் உள்ள சில கட்சிகளைச் சேர்ந்தோர் ஒரு சொல் பிழைத்தாலும் கூட அரசாங்கத்தில் இருந்து விலகி விடுவோம் என்கின்றார்கள். போக விரும்பினால் போகட்டும் இப்படியானவர்களை வைத்துக்கொண்டு ஆட்சி செய்ய முடியாது" என்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூற்றுக்கள் அவர் ஜே.வி.பி மீது வெறுப்பின் உச்சத்திற்கே போய்விட்டார் என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகா இவ்வாறு வெறுத்துப்போனதற்கும் காரணம்இல்லாமல் இல்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரி காவினதும், ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்தினதும் சொல்லும் செயலும் எதிலுமே தமக்குத் தெரியாமல் எதுவுமே இடம்பெறக் கூடாது என ஜே.வி.பி கருதுகின்றது. அவ்வாறு ஏதும் நடந்து விட்டால் ஆட்சியை விட்டு வெளியேறிவிடுவோம் என்ற எச்சரிக்கை வழமையானதாகி விட்டது. இத்தனைக்கும் அரசாங்கம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு அது முகம் கொடுப்பதில்லை. அவ்வேளைகளில் பார்வையாளராகவே இருந்துவிடப்பார்க்கிறது.

இலங்கைக்கு 45000 கோடிரூபா கடன் வழங்க சர்வதேச சமூகம் முன்வந்தபோதும் ஜே.வி.பி யின் விடாப்பிடியானபோக்குக் காரணமாகவே– அதாவது விடுதலைப்புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து பேச்சுவார்த்தை நடாத்த ஜே.வி.பி முட்டுக்கட்டை போட்டதன் விளைவாகவே – அப்பெரும் நிதியுதவி கிடைக்காது தடைப்பட்டுப்போனது. ஆனால் அன்றைய நிலையில் ஜே.வி.பியைப் பகைத்துக்கொண்டு ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்க முடியாதென்ற நிலையிலேயே சனாதிபதி சந்திரிகா பொறுமை காத்தார்.

ஆனால் தற்பொழுது சுனாமிப் பேரலையின் பின்னர் நிபந்தனைகள் அற்ற விதத்தில் கையில்வந்து குவியும் நிதியையும் ஜே.வி.பியினரின் செயற்பாடுகள் குழம்பியடித்துவிடுமோ என்ற ஐயப்பாடு சனாதிபதி சந்திரிகாவிற்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறானதொரு நிலை உருவாகுமானால் ஜே.வி.பி யினரின் உதவி கிட்டினால் கூட ஆட்சி அதிகாரத்தைத் தொடர முடியாது என்பது சனாதிபதி சந்திரிகாவிற்கு நன்கே தெரியும். இத்தகையதொரு நிலையிலேயே சனாதிபதி இத்தகையதொரு சீற்றத்தை வெளிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

"சுனாமி" அனர்த்தத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குப் பல நாடுகள், நிதிநிறுவனங்கள் பல நூறுகோடி டொலர்களை உதவிக்காக வழங்க முன்வந்துள்ளன. ஆனால் அந்நிதியுதவிகள் பாதிக்கப்பட்டவர்களை உரியமுறையில் சென்றடைகின்றனவா? என்பது குறித்தும் அவை அக்கறை கொண்டுள்ளன.

அத்தோடு சுனாமியின் பாதிப்புக்குறித்து தெளிவான அறிவையும் அவை கொண்டுள்ளன. அதாவது இலங்கையில் எப்பகுதிகளில் பாதிப்புக்கள் அதிகம். எத்தகைய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. என்பது போன்ற விபரங்களைத் தெளிவாகவே அறியப்பட்டுள்ளன. இந்நிலையில் எங்குகெங்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். யார் யாருக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெண அவை அறிந்துள்ளன.

இதன் காரணமாக அரசாங்கம் முழுஅளவில் இல்லாது போனாலும் ஓரளவேனும் வடக்கு–கிழக்கிற்கும் குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் பங்கீடுகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதன் காரணமாவே விடுதலைப்புலிகளுடன் இணைந்து நிவாரணப்பணிக்கான கட்டமைப்பொன்றை உருவாக்குவது குறித்து அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியதாகியது.

ஆரம்பத்தில் இவ்விடயம் ஜே.வி.பி யின் காதுகளுக்கு எட்டாது இரகசியமாக வைக்கப்பட்டபோதும் இவ்விடயம் வெளிவந்ததைத் தொடர்ந்து ஜே.வி.பி தனது ஆட்சேபத்தையும், எதிர்ப்பையும் வெளிக்காட்டத் தொடங்கியது. அத்தோடு வழமைபோலவே புலிகளுடன் இணைந்து புதிய கட்டமைப்பு ஒன்று அமைக்கப்படுமானால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறப் போவதாகவும் எச்சரித்தது.

சனாதிபதி சந்திரிகாவிற்கு ஜே.வி.பியினரின் இந்நிலைப்பாட்டினால் கிடைக்கக் கூடிய பெரும் அளவிலான நிதி கிடைக்காது போகலாம் என்று அச்சம் எழுவது நியாயபூர்வமானதே. ஏற்கனவே உதவித்தொகைகளை அறிவித்த பல நாடுகள் தமது உதவியின் பெரும் பகுதியை அரசசார்பற்ற நிறுவனங்களின் கைகளில் வழங்கிவிட்டன. இத்தகையதொரு நிலை நீடிப்பின் நிதியுதவிகள் அரசின் கைகளில் மூழுஅளவில் வந்தடைவதோ அன்றி அரசாங்கம் பயன் பெறுவதோ சாத்தியமற்றதொன்றாகிவிடும்.

இதன் காரணமாகவே ஜே.வி.பி.யின் செயற்பாட்டில் சனாதிபதி சந்திரிகா வெறுத்துப்போயுள்ளார் என்பதே உண்மை. பொறுமை காத்தது போதும் என்கின்ற நிலையிலேயே போவதானால் போங்கள் என 'குட்பாய்' சொல்லவும் தயாராகிவிட்டார். ஆனால் ஜே.வி.பியினர் இன்றைய அரசியல் பலம் பெறுவதற்கும், அவர்கள் அரசாங்கத்தை மிரட்டும் வகையில் வளர்ச்சி கண்டமைக்கும் சனாதிபதியின் அதிகாரஅபிலாசைகளே காரணமாகும்.

கடந்த தேர்தலுக்கு முன்னதான தேர்தல்களில் உதிரி வாக்குகள் மூலம் ஒரு சில ஆசனங்களைக்கைப்பற்றிய ஜே.வி.பி இன்று பலம் பொருந்திய அரசியல் சக்தியாக, பலமானதொரு கட்சி யாக வளர்ச்சியடையக் காரணமாக இருந்தவர் சனாதிபதி சந்திரிகாவே ஆவார் இன்று கைதூக்கி விட்டவர்களின் மீதே பாயமுற்படுகிறது ஜே.வி.பி. இது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சனாதிபதி சந்திரிகாவிற்கும் தேவையானதொன்றே. ஏனெனில் அவர்களின் கடந்தகாலத் தவறே இன்றைய இத்தகைய நிலைக்குக் காரணமாகும்.

-போராளிகளுக்கு நடக்கும் அனர்த்தம் தொடரின்-

# போரை ஆரம்பிக்குமாறு தேசியத்தலைவரைக் கோருவோம்

—முல்லை மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்

கௌசல்யன் உள்ளிட்ட அனைவரதும் கொலைக்குமான காரணங்களை கண்டுபிடிக்க வேண்டும் எங்களது போராளிகளுக்கு நடத்த கடைசி அனர்த்தம் இதுவென உங்களால் உறுதி செய்யப்படவேண்டும் அவ்வாறு செய்வீர்களானால் சாவுமணிக்குப் பதிலாக சமாதான மணி கேட்டும் இல்லைே யல் போர்மணி தேசம் பூராகவும் ஒலிக்கும்.

தேசியத்தலைவரை போரை ஆரம்பிக்குமாறு கோருவோம், போருக்கான பின்புலத்தைச் செப்பனிடுவோம்,மக்கள் போராகக் களத்தில் குதிப்போம் இவ்வாறு நேற்று முல்லை மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் எங்கள் தேசத்தை விட்டுப்பிரிந்த லெப்.கேணல் கௌசல்யன் தேசியத்தலைவரால் பேச்சுவார்த்தைக்கு உறுப்பினராகத்தெரிவுசெய்யப்பட்ட ஒருவராவார். அதனால் எங்கள் இனத்தின் இறைமை உரிமைகளை மேற்குலகில் பல நாடுகளுக்குச் சென்று பேசித் தீர்வுக்கு உழைத்து வந்தார். இன்று கூட அவரும் அவரது தலைவரும் சுனாமியால் பாதிப்புற்ற மக்கள் மறுவாழ்விற்கு தேசியத்தலைமையுடன் ஆலோசனை பெறச்சென்று வந்தபோது இக்கொடூரம் நடைபெற்றது. இயற்கை சீறியதால் உறவுகள் அழிந்த வேளையில் பகை மறந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்று கூறிக்கொண்ட சிறிலங்கா அரசு அந்தத் தேசத்தைக் கட்டியெழுப்ப அல்லும் பகலும் உழைத்த லெப்.கேணல் கௌசல்யன் அவர்களை கொலை செய்தமை இந்த வேளையிலும் அரசின் கொலை வெறியை உணர வைக்கின்றனது.

சுனாமி அழிவிற்குக் கிடைத்த உதவிகளில் அரசியல் நடாத்தி இதில் ஆயுதங்களையும் கொள்வனவு செய்ய முயலும் சிறிலங்கா அரசு இந்தக் காலத்திலும் இராணுவ ரீதியிலும் எமது போராட்டத்தை அழிக்க கூர்ப்புப் பெற்றுள்ளது என்பதை இச்சம்பவம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இரண்டு சிறிலங்கா இராணுவ முகாமிற்கு இடைப்பட்ட பகுதிகளில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவச் சீருடைகளில் நின்று எங்கள் போராளிகளை அழித்தவர்கள் யாருமல்ல சிறிலங்கா இராணுவமே. இந்தவகையான சிறில்ங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையினால் நாம் பல போராளிகளை சமாதான காலத்தில் இழந்து விட்டோம். இறுதியாக கௌசல்யனினதும், ஏனைய போராளிகளினதும் வீரமரணம் "சமாதானத்திற்கே சாவுமணி அடிக் கும சூழலை ஏற்பத்தி விட்டது. என்பதனை சந்தேக மில்லாது உணருகின்றோம். இவ்வாறான எம் போராளிகளை இனியும் நாம் இழக்கத் தயாராக இல்லை. தொடரப் போகும் போருக்கு முழுப் பொறுப்பும் சிறிலங்கா அரசு தான் என்பதனை நீங்கள் அறிவீர்கள் என நம்புகின்றோம். எனத்தெரி விக்கப்பட்டுள்ளது. (08,கு)

# சிறுவர்களைப் போரிற்கு இணைப்பதான புலிகள் மீதான குற்றச்சாட்டு விசமத்தனமானது

– ஐ. நா. செயலருக்கு யாழ் பொது அமைப்புகள் கடிதம்

இயற்கையின் அனர்த்தத்தினால பாதிக்கப்பட்ட மக்களுக்கும், தாய், தந்தையரை இழந்தசிறார்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கமும், தொண்டர் அமைப்புக்களும் மிகுந்த காத்திரமான பணிகளை மேற்கொண்டுவரும் இந்த நல்ல சூழ்நிலையில் மக்கள் மயப்பட்டுள்ள உரிமைப் போராட்டத்தை நல்லெண்ணத்தைச் சீர்குலைக்கவே சிறுவர்களை படைக்குத் திரட்டுகிறார்கள். சிறுவர்களை போரில் ஈடுபடுத்துகின்றார்கள் என்ற விசமப் பிரச்சாரங்கள் குறிப்பாக அரசும், அரசு அருவடிகளும் அரச ஊடகங்களும் திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறார்கள். உண்மையிலேயே தாமாக விருப்புடன் உணர்வுடன் வருகின்ற வயதில் குறைந்தவர்கள் சிறுவர் பாதுகாப்பு நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கான புனர்வாழ்வு அளிக்கப்படுகின்றது. அத்துடன் அவர்களுக்கான புனர்வாழ்வு வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வாழ்வில் நம்பிக்கை வளர்த்து முறையாகப் பெற்றோரிடம் கையளிக்கப்படடுகிறார்கள். அண்மையில் (03.02.2005) 23 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள் இவ்வாறு யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஐ.நா செயலருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது புலிகள் சிறுவர்களைப்படையில் இணைப்பதாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக எழுதிய கடிதத் திலேயே இவ்வாறு. தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, சுனாமி பேரழிவின் பின்னர் எத்தனையோ சிறுவர்கள் வாழவழியின்றி மனோநிலை பாதிக்கப்பட்டு தனித்துவிடப் பட்டிருக்கும் சூழநிலைகளிலும் அவர்களை அரவணைத்து அவர்களது எதிர்காலத்திற்கு நம்பிக்கை யூட்டி உளவியல்ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடக் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போர் நிறுத்தம் தோற்றம் பெற்றுள்ள இந்த நிலையில் போருக்கு சிறுவர்களை இணைக்கின்ற தேவைகள் இல்லாதபோதும் சீரான கல்வி கற்க முடியாத வசதியற்ற குடும்ப சூழ்நிலையும் உண்டு, உணவுதேடும் நிலைமை, தொழிலின்மை, எதிர்கால சிந்தனை இவற்றுக்கு அரசிடம் ஆக்கபூர்வமான திட்டம் கிடையாது. இதன் பிரதிப்பலிப்பாகவே நூற்றுக்கணக்கான சிறுவர்கள், பெற்றோர் உறவினர்களை இழந்து தனித்து விடப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிர்காலமுண்டு என்ற சிந்தனையில் தமிழ் மக்களது அவசர தேவைகளைப் புறந்தள்ளி செயற்படும் அரச நிறுவனங்கள் திறனற்றவையாகவே உள்ளன அத்துடன் பேரினவாத சகதியுள் மூழ்கிக்கிடக்கின்றன அச்சிறுவர்களது நல்வாழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாரிய பொறுப்பினை தமிழீழ விடுதலைப் புலிகள் விருப்புடன் வரித்துள்ளனர். இப்பொறுப்பினை செவ்வனே நிறைவேற்றுகின்றனர். என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்பது மறுக்கவெண்ணாத உண்மையாகும். மனித நேயம் முதனிலைப்படுத்தப்பட வேண்டும்: சாசனங்களது குறுகியவடிவம் மனித நேயத்தை தீர்மானிக்க முடியாது. வடக்குக்கிழக்கு மனித உரிமை செயலகப்பணிப்பாளர் வண.பிதா M.F.X கருணைரத்தினம் அவர்களிடம் அரசசார்பற்ற நிறுவனங்களின் .இணைப்பாளர் திரு. தியாகராசாவினால் 3.02.2005 அன்று 23 சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டு முறையாகப் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டர்கள். எனவே குறுகிய நோக்குடனான அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்த்து மெய்யான களநிலைமையினை சீர்தூக்கி மதிப்பிட்டு நிரந்தர சமாதானத்திற்கான நம்பிக்கையை உருவாக்குவதற்கான காட்டுமானங்களை முதலில் கட்டி எழுப்புவதனூடாகவே சிறுவர்களது முழுமையான நலன் பேணும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே சர்வதேச சமூகத்தின் கடப்பாடாகும். இன்றைய சிறுவர்களே நாளைய உலகத்தின் சிற்பிகளாவர் என்ற தெளிவுடன் சிறுவர்களது உரிமைகளை பேணுவோம் என உறுதியெடுத்து அவர்களுக்கான மகிழ்ச்சிகரமான போரற்ற சூழநிலையை உருவாக்குதலே எம் அனைவரதும் இலக்காக விளங்கட்டும் சிறுவர்கள் நலன் பேண நாமனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் வாரீர் என அனைவரையும் அழைக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் கொபி அனானுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. (36,சு,33)

—மரபணுப் பரிசோதனையின் மூலம்—

# நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தோரே குழந்தையின் பெற்றோர் என ஊர்ஜிதம்

சுனாமி கடல் அனர்த்தத்தின்போது அநாதரவான நிலையில் காப்பாற்றப்பட்டு பின்னர் ஒன்பது தாய் தந்தையரால் உரிமை கோரப்பட்டு, மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தையின் உண்மையான தாய் தந்தையர் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளனர். கல்முனை வைத்தியசாலையில் 81 ஆம் இலக்க கட்டிலில் இந்தக் குழந்தை இருந்ததால் சுனாமி 81 பேபி என அழைக்கப்பட்ட இந்தக் குழந்தையின் பெற்றோர் என உரிமை கோருபவர்களில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த தாய் தந்தையரின் இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தியதை அடுத்து இவர்களே இந்தக் குழந்தையின் பெற்றோர் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழந்தை கல்முனை நீதிமன்றத்தில் வைத்து நாளை புதன்கிழமை பெற்றோரிடம் கையளிக்கப்படவுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மட்டு. சென்ற பெண் போராளிகளை தடுத்துவைத்திருந்த அதிரடிப்படை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பிற்குச் சென்ற போராளிகளை நேற்று முன்தினமிரவு வரை அக்கரைப்பற்று விசேட அதிரடிப் படையினர் தடுத்துவைத்து சோதனை செய்ய வேண்டுமொன கூறியதையடுத்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

மேற்படி சம்பவத்தின் போது விடுதலைப்புலிகளின் தரப்பில் பத்துப்பெண் போராளிகளும் இருந்துள்ளனர்.

இவர்களை சோதனை இட் வேண்டுமென அதிரடிப்படையினர் கூறியதை அடுத்து பெண் போராளிகளை சோதனை இடுவதானால் பெண் அதிரடிப்படையினர்தான் செய்ய முடியும் என போராளிகள் அதிரடிப் படையினருக்கு கூறினர். இதனால் சுமார் இரண்டரை மணித்தியாலம் அவ்விடத்தில் விடுதலைப் புலிகளின் போராளிகள் தடுத்துவைக்கப்பட்டிருந் தனர் (48)

## போர் நிறுத்த உடன்பாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது

சமாதான நிலைப்பாடுகள் பின்தள்ளிச்செல்லக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி எல் பீரிஸ் இது தொடர்பில் கருத்துரைக்கையில், நாடு பல மாதங்களாக தெரிந்து வைத்திருந்த செய்தி ஒன்றை சனாதிபதி நிட்டம்புவ நகரில நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்ததாகக் கூறியுள்ளார். சமாதானம் தொடர்பாக தாம் எடுக்கும் நடவடிக்கைகளை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ள வில்லை என சனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இதனையே சுட்டிக்காட்டியுள்ள ஜி எல் பீரிஸ் சனாதிபதியின் இந்தக் கருத்தானது போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஆபத்து வந்துள்ளமையைச் சுட்டி நிற்பதாகவும் தெரிவித் துள்ளார்.(32)

# விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் மார்கழி தை- மாதத்திற்குரிய 121 ஆவது குரல் "சமாதானத்தைக் குழப்பியடிக்கும் படுகொலை முயற்சிகள்", "இயற்கை அழிவிலும் இனவாதச் சிந்தனை" என்ற முகப்புச் செய்திகளுடன் இன்று வெளிவருகின்றது.

"கடற்கோள்" எனச் சொல்லும் ஆசிரியர் தலையங்கத்துடன் வரும் இவ்வேடு க.வே.பாலகுமாரன் எழுதிய "சுனாமியின் அரசியல் மீதான அதிரடித் தாக்குதல்" என்ற அரசியல் கட்டுரையும், "இனவாத அரசியலை அம்பலப்படுத்திய சுனாமி" "சுனாமிக்குப்பின் இன்னொரு போர் சுனாமி நிதிப்போர்" "சுனாமி நிவாரணம் வடக்குக் கிழக்கில் என்ன நடக்கிறது.? போன்ற அரசியல் கட்டுரைகளுடன் கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய சுனாமியும் நாமும்" என்ற கட்டுரையையும் தாங்கி வருகின்றது.

மற்றும் "மிஞ்சியவர் சொல்கின்ற கடலாடு காதைகள் என்ற கட்டுரையுடன் மட்டக்களப்பின் வவுணதீவு கிராம படுகொலை நினைவூட்டல் கட்டுரையும் 'உலைக்களம்' விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ் ஏடு வெளிவருகின்றது.

-கிளி.நகர மின்சாரவிநியோகம்

# வலு கூடிய மின்பிறப்பாக்கி மூலம் நாளை பரீட்சார்த்தமாக ஆரம்பம்

கிளிநொச்சி நகரமும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் இது வரை வழங்கப்பட்ட மின்சார விநியோகத்தில் பாவனையாளரின் அதிருப்தியினையும், அசௌகரியங்களையும் நீக்கும் பொருட்டு இலங்கை மின்சாரசபையின், வடபிராந்திய மின்சாரசபையும் இலங்கை மின்சாரசபைத் தலைமைப் பணிமனையில் வட பிராந்திய இணைப்பாளராகக் கடமையாற்றும் முத்துரத தினானந்தம் அவர்களின் பெரு முயற்சியாலும், கிளி.அரச அதிபரின் இடையறாத முயற்சியாலும் இரணைமடுச் சந்திக்கு அருகாமையில் பொருத்தப்பட்ட ஒருமெகா வாற் (One Mega Watt) ஜெனரேட்டர் மூலம் நாளை தொடக்கம் பரீட்சார்த்தமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சார சபையினர் பாவனையாளர்களுக்கு அறியத்தரு கின்றனர்.

### கிளிநொச்சி...

விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும், போராளிகளும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவும் மன்னார் மாவட்டத்தில் கொலலப்பட்ட பொதுமகன், காயப்பட்ட போராளிகள் ஆகியோரின் கொலைச் செயலை கண்டித்தும் இன்று காலை 9 மணியளவில் கிளி நொச்சி கந்தசாமி கோவிலடியில் இருந்தும் சந்திரன் பூங்காவில் இருந்தும் ஆரம்பமாகி போர் நிறுத்த கண்காணிப்பு குழு செயலகத்தில் நிறைவு பெறும் கண்டனப் பேரணியில் எமது வன்மையான கண்டனத்தை சர்வதேச சமூகத்திற்கும் ,சிறிலங்கா அரசுக்கும் வெளிக்காட்டுவோம்.

இன்று நடைபெற விருக்கும் கிளி.மாவட்ட வெகுசன ஒன்றியத்தினரதும், தேசிய எழுச்சிப்பேரவையினதும் பொது அமைப்பினரதும் ஏற்பாட்டில் அரச திணைக்களத்தினரும், அரசுசாரா அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், ஊழியர்கள், தொண்டர்கள், வர்த்தகர்கள், ஊர்திசேவையினர், பொது அமைப்புக்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இப் பேரணியில் கலந்து மகஜர் கையளிக்கும் நிகழ்வுவரை எமது கண்டனங்களை ஒன்றுபட்ட மன உணர்வுகளின் வெளிப்பாட்டினை, சமாதானத்திற்கு முட்டுக்கட்டைபோடும் சிறிலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் ஏகோபித்த குரலில் வெளிப்படுத்துவோம் என பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

### புறச்...

மட்டு அம்பாறையில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையனிடம் செவ்வி கண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.மட்டு-அம்பாறையில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாக அவரிடம் பி.பி.ஸியின் தமிழோசை கேட்ட கேள்விகளுக்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் ,

அண்மைக் காலத்தில் சுனாமி அனர்த்தத்தின் பின்பு மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களிலே எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ள ஒரு நிலையில், முஸ்லிம் மக்களும் தமிழ்மக்களும் இணைந்து சுனாமி அனர்த்தத்தினை எதிர் கொண்ட விதமானது ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அந்தச் சூழ்நிலையை நாங்கள் மிகவும் உற்சாகப்படுத்தி இரண்டு தரப்பினர்களுக்குமிடையிலே ஒரு சுமுகமான உறவை முன்பு இருந்ததுபோல் ஒரு நல்ல புரிந்துணர்வுடனான ஒரு உறவு நிலையை வளர்த்தெடுப்பதே இந்தச் சந்திப்பின் நோக்கம்.

இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவே பெரும்பாலும் அங்கு ஆராயப்பட்டன.

சுமுகமான ஓர் உறவு ஏற்படுவதற்கு இணக்கக் குழுக்களை அமைத்துள்ளோம். இரண்டு தரப்புப் பிரதிநிதிகளும் சமயம் சட்டரீதியான மற்றும் முறைமை சார்ந்த விடயங் களைச் சொல்லக கூடிய நிபுணர்கள் அடங்கிய குழுக்களை உருவாக்கி அந்தக் குழுக்களினூடாக எல் லோரும் ஏற்கக் கூடிய ஒரு நல்ல தீர்வுகளைக் காண்பதே எமது நோக்கம்.

இன்றைய சந்திப்பிலே எங்களுடைய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைவருடைய செய்தியை முஸ்லிம் பிரதிநிதி களுக்குச் சொன்னார். இதனை அவர்கள் ஏற்றுக் கொண்டு இது தொடர்பாக அவர்கள் தங்களினுடைய கருத்துக்களையும் சொன்னார்கள்.என்றனர்.

மட்டு...

இதனை எதிர்ப்பதாகவும் மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி அறிவித்துள்ளார். (32)

### முல்லை...

மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றி வைத்தார். கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. தொடர்ந்து மாவீரர்களது உருவப்படங்களுக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டதை அடுத்து மௌன அஞ்சலி செலு[illegible]ப்பட்டது.

அதையடுத்து கண்டன உரைகளை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம், ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.சரவணபவன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார்.

இதேபோன்று முள்ளியவளையில் நடைபெற்ற கண்டன நிகழ்வானது முள்ளிவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. இங்கு நினைவுரையினை வைத்திய காலாநிதி ஜெயகுலராஜா நிகழ்த்தினார்.

மேற்படி கண்டனக் கூட்டங்களில் வைத்து வாசிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் மகஜர், முல்லைத்தீவு மாவட்ட கல்விமேம்பாட்டு பேரவையின் மகஜர், முல்லைமாவட்ட அன்னையர் முன்னணியினரின் மகஜர் ஆகியவற்றைக் கிளிநொச்சியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் மேற்படி மகஜர்களுக்கு பொறுப்பானவர்கள் கையளித்தனர்.

மாங்குளம் பிரதேச மக்களின் கண்டனப் பேரணி நேற்றுக்காலை 9.30 மணிக்கு மாங்குளம் சந்தியிலிருந்து புறப்பட்டு மாங்குளம் மகாவித்தியாலயத்தினை வந்தடைந்து அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. சிறப்புரையினையடுத்து அன்னையர் முன்னணியினரினால் தயாரிக்கப்பட்ட கண்டன அறிக்கை வாசிக்கப்பட்டது.

மல்லாவிப் பகுதியில் காலை 10.00 மணிக்கு அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி நடராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னதாக பொது அமைப்புகளின் ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனப் பேரணி நடைபெற்றது. அதில் படுகொலை செய்யப்பட்ட மாவீரர்கள் நால்வரோடு நாட்டுப்பற்றாளர் அரியநாயகம் சந்திரநேருவின் திருவுருவப்படங்கள் எடுத்துவரப்பட்டன.

பேரணி நகர்ந்து யோகபுரம் மகா.வித்தியாலயத்தை வந்து அடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நினைவுரையினை ஆசிரியர் சிவசக்தி மோகன், உதவி அரச அதிபர் நா.நந்தகுமார் மேரிதிரேசா பசுபதி, மாதர் சங்கத் தலைவி திருமதி விஜயலட்சுமி கண்ணன் ஆகியோர் வழங்கினர்.

கண்டன அறிக்கைகள் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கண்காணிப்புக் குழு பிரதிநிதியிடம் ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி பு.நடராசாவினால் கையளிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டானில் காலை 10.00 மணி மட்டு,அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர், மாமனிதர் அரியநாயகம் சந்தரநேரு, மூன்று மாவீரர் ஆகியோரின் திருவுருவப்படங்களைத் தாங்கியவாறு ஒட்டுச்சுட்டான் சந்தியிலிருந்து ஊர்வலமாகச் சென்று ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன வளாகத்தை சென்றடைந்தது. அங்குவைத்து ஒட்டுசுட்டான் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் வே.தயாபரன் தலைமையில் கண்டனக் கூட்டம் ஆரம்பமானது.

கண்டன உரையினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா, ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப பொறுப்பாளர் தமிழரசன், ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர், கற்சிலை மடு அ.த.க.பாடசாலை அதிபர் ஆகியோர் ஆற்றினர்.

(08,20,கு,05,சோ)

### புலிகள்...

சமூக ஒற்றுமையை கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. ஆனால் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்பு எமது தலைமையின் முதலாவது நடவடிக்கை முஸ்லிம்களுடன் பேசி ஒற்றுமையை கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டது. ஆனால் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் துர்ரதிர்ஸ்டவசமாக அமுலுக்கு வரவில்லை. இதற்குக் காரணம் இரு தரப்பிலும் இருந்த நடைமுறைப் பிறழ்வுகளாகும். இதனால் தான் அமுற்படுத்துவதிலும் தாமதங்கள் ஏற்பட்டன.

தமிழ் முஸ்லிம் இனங்களிடையே அர்ப்பணிப்பும், ஒற்றுமையும் இருக்குமானால் தான் எமது தாயக உரிமைகளைப் பெற முடியும் என்பதில் உறுதியாகவிருக்கின்றோம். சிங்கள பேரினவாதம் தான் கடந்த காலங்களில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியது.அன்று பேரினவாதிகளின் பலம் ஓங்கியிருந்தமையினால் அது சாத்தியப்பட்டது. தற்போது நாம் பலம் பெற்று நிற்கின்றோம். இருப்பினும் பேரினவாத சக்திகளின் சதி நடவடிக்கைகள் தொடருகின்றது. இதனை நாம் முறியடிக்க வேண்டும். அந்த பேரினவாதிகள் குறிப்பாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களை ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் நகர்வுகளை மேற்கொள்கின்றார்கள் இதனை நாம் அனுமதிக்க முடியாது. இரு இனங்களும் சேர்ந்து இதனை முறியடிக்க வேண்டும். எமது ஒற்றுமை ஊடாக ஏற்படும் பலத்தினால் அதனை முறியடிப்போம். சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்பு இந்தப் பேரின்வாதம் எப்படிப் பட்டது என்பது மீண்டும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. எமது தலைவர் சுனாமியின் பின்பு சிறிலங்கா அரசிற்கு நேர்வே ஊடாக ஒரு வேண்டுகோள் விடுத்தார். சுனாமியினால் அனைத்து இன மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிங்களவர்கள் கூட ஒரு சிறு வீதம் பாதிக்கப்டப்டுள்ளார்கள் இந் நிலையில் மூன்று இனங்களையும் உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி சர்வதேச உதவிகளை அந்தந்தப் பகுதிகளுக்கு பகிர்ந்தளிப்பது என்பதே அது. இந்த யோசனை சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றது. அவர்கள் அதனைப் பாராட்டினார்கள். ஆனால் சிறிலங்கா அரசு அதைப் பற்றி எத்தகைய ஆக்கபூர்வமான சாதகமான பதிலையும் தரவில்லை. சமாதானம் மற்றும் அமைதி வழிமுறைகள் மூலம் தீர்வொன்றை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கேள்விக்குறியாக உள்ளது. இனி வரும் சூழல் எப்படி அமையும் என்பதை பார்த்துக் கொண்டும் சில முடிவுகளை நாங்கள் எடுக்க வேண்டியுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தவுடன் எமது தலைவரின் பணிப்புரைக்கு அமைய முஸ்லிம் தலைமைகளுடன் பேசினோம். சில முடிவுகள் எடுத்தோம். அது அரசியல் முரண்பாடு பிழைகள் காரணமாக அமுலுக்கு வரவில்லை. அதற்கு எமது நிர்வாகத்தின் சில தவறுகளும் காரணமாக இருந்திருக்கலாம். எமது தலைவரைப் பொறுத்தவரை ஆரம்ப காலம் முதலே முஸ்லிம் - தமிழ் நல்லுறவு தொடர்பாக மாறாத கொள்கையைக் கொன்டிருக்கின்றார் என்றும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி பானு, மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளந்திரையன், விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, மூத்த உறுப்பினர் க.வே பாலகுமாரன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் மக்கள் சார்பில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 15 முஸ்லிம் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை 'கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது